


ஸ்ரீ குமரகுருபரர் 300 ஆம் ஆண்டு நிறைவு
88 மே முதல் 89 மே முடிய

தொகுதி - 10 பகுதி - 4

சிவ சிவ

நமரங்காள்!

குடிகொன்று இறைகொள்ளும் கோமகற்குக் கற்ரு
மடிகொன்று பால்கொளலும் மாண்பே—குடியோம்பிக்
கொள்ளுமா கொள்வோற்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல.

— **ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்**

குடிமக்களை வருத்தி அளவுக்குமீறி வரிவாங்கும் அரசனுக்குக் "கன்றீன்ற பசுவின் மடியை வருத்திப் பால்முற்றும் கரந்து கொள்ளுதலும்" சிறப்புடைத்தாகவே தோன்றும். ஆனல், குடிமக்களைப் பேணி வரிகொள்ளும் முறைப்படி ஆறில் ஒன்றை வரியாகக் கொள்ளும் அரசனிடத்தே வெள்ளம் என்னும் பேரெண்ணுக்கு மேலும் பலவாகப் பெருஞ்செல்வம் இருப்பதை நாம் காண்கின்ருேம்.

# ஸ்ரீ குமரகுருபரர்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலைமாமுனிவர்
**ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்சுவாமிகள் அவர்கள்**
அருளாணையின் வண்ணம் வெளிவரும் சமய இலக்கியத் திங்களிதழ்.

சிறப்பாசிரியர்கள்
**திரு. அ. ச. ஞானசம்பந்தன்**
**திரு. தா. ம. வெள்ளைவாரணம்**

**ஆசிரியர் குழு :**
திரு. மு. அருணசலம்
செந்தமிழ்க் கலாநிதி
திரு. கா. ம. வேங்கடராமையா
முதுமுனைவர்
ச. தண்டபாணி தேசிகர்
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்முதலியார்
திரு. க. வச்சிரவேல்முதலியார்
புலவர் திரு. கீரன்
டாக்டர் டி. பி. சித்தலிங்கையா
டாக்டர் கு. சுந்தரமூர்த்தி
பனசை. திரு. சுவாமிநாதன்

உள்ளே :

1 மக்கள் திலகத்தின் மறைவு
2 பெருமான் புகழ்
3 ஸ்ரீ குமரகுருபரர் நெறி விளக்கம்
4 ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300ஆவது ஆண்டு நிறைவு
5 ஸ்ரீ குமரகுருபர அடிகள் வரலாறு
6 நூல் நிறை
7 ஆலயபூஜைப் படிக்காசுநிதி
8 ஸ்ரீ குமரகுருபரர் கண்டநடம்
9 மதுரைக் கலம்பகம்
10 ஞானமிர்தம்

# மக்கள் திலகத்தின் மறைவு

உழைப்பால் உயர்ச்சிகள் அனைத்தும் கிடைக்கும் என்பதற்கு உதாரணமாக விளங்கியர் மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்கள். அவரின் மறைவு ஆத்திக உலகத்திலும் பெரும் துயரத்தை ஏற்படுத்தியிருக்கிறது. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கொள்கையே தம் கொள்கை எனப் பேரறிஞர் அண்ணா அறிவித்த நீண்ட இடைவெளிக்குப் பிறகு அக்கொள்கையைத் தெளிவாக நடைமுறைக்குக் கொண்டுவந்தவர் என்பதே ஆத்திக உலகம் அவர்பால் ஈடுபாடு கொண்டமைக்குக் காரணம் என்றால் அது மிகையாகாது.

அவர் இஷ்ட தெய்வ வழிபாட்டை மேற்கொண்டமை பத்தாண்டுகளுக்குமுன்பு மறையாக இருந்தது. பின்னே அது வெளிப்படையானது மட்டுமல்லாமல் அதனடிப்படையில் அவரைப் பின்பற்றியவர்களெல்லாம் இறைக் கொள்கையில் ஆழங்காற்பட்டார்கள். அது ஆத்திகர்களிடையே உற்சாகத்தை ஊட்டியது.

மதுரையில் மிகச்சிறப்பாக உலகத்தமிழ் மாநாடு நிகழ்த்தியமைக்காக ஆத்திக நிறுவனங்கள் திருமடங்கள் திருக்கோயில்கள் சார்பாகத் திருச்சியில் மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்களுக்கு மாபெரும் பாராட்டு விழா நிகழ்த்தியபோது அவர் பேசிய பேச்சு அவர் பொன்மனச் செம்மல் மட்டுமல்ல, ஆத்திகச் செம்மலும்கூட என்பதை உறுதிசெய்தது. நாத்திகம் பேசுபவர்கள் இராகுகாலம் பார்ப்பதிலும் தனக்கென்றே தனியாக ஜோசியர்களை அமர்த்திக் கொள்வதிலும், குடும்பத்தார்களை அனுப்பிக் குல தெய்வ வழிபாடு செய்வதிலும் எவ்வளவு தீவிரமாக

இருக்கிறார்கள் என்பதை அவர் அப்போது தெளிவு செய்தார். அந்த வெள்ளை உள்ளத்தை இழந்த துயரப் புண் எப்படி விரைவில் ஆறமுடியும்? அதனாலேதான் கயிலைமாமுனிவர் ஸ்ரீ ல ஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அனுப்பிய தம் அனுதாபச் செய்தியில் அவரை இழந்ததால் தவிக்கும் லட்சோப லட்சம் மக்களுக்காகவும் ஆறுதல் வேண்டிப் பிரார்த்திப்பதாக அறிவித்தருளியுள்ளார்கள்.

நட்டோரை உயர்பு கூறினன்
வலியரென வழி மொழியலன்
மெலியரென மிக்கூறலன்
பிறரைத்தான் இரப்பறியலன்
இரந்தார்க்கு மறுப்பறியலன்
வேந்துடை அவையத்து ஓங்குபுகழ்தோற்றினன்
வருபடை எதிர்தாங்கினன்
பெயர்படை புறங்கண்டனன்
பாலுவப்பப் பசிதீர்ந்தனன்
மயக்குடைய மொழி விடுத்தனன் ஆங்குச்
செய்ப வெல்லாம் செய்தனன் ஆகலின்
இடுகவொன்றோ சுடுகவொன்றோ
படுவழிப் படுக இப்புகழ் வெய்யோன் தலையே

என்ற பேரெயின் முறுவலாரின்
புறப்பாட்டுத் தொடரைப் பொன்மனச் செம்மலின்
ஆன்மாவுக்குக் காணிக்கை யாக்குவோம்.

—ரி. ஆர்.

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்.



# பெருமான் புகழ்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
"கயிலைமாமுனிவர்" ஸ்ரீ ல ஸ்ரீ
**காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**

சிவபரம் பொருளுக்கு ஆதியும் இல்லை; அந்தமும் இல்லை. அருளாளர்கள் இந்த உண்மையைப் பல்வேறு முறைகளில் தெளிய விளக்கியிருக்கிறார்கள். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஒரு விடுகதைபோல இச்செய்தியை அறிவிப்பது சுவையாகவும் நினைவுட்கொள்ள ஏதுவாகவுமுள்ளது.

ஒரு மேருமலை. அது பொன்னிறமாக இருக்கும் அந்த மேருமலை பொன்னாகிய மேற்கூரைக்குள் மாணிக்க மாலைகள் தொங்கும் விதானத்திற்குள் இருக்கிறது. அதற்கு ஆதியும் இல்லை - அந்தமும் இல்லை. இதுவே ஸ்ரீசுவாமிகள் அருளிய பிசி, அல்லது விடுகதை "ஸ்ரீமந் நடராஜப் பெருமான்" என்பதே இப்பிசியின் விடை.

"செம்பொன் வேய்ந்த செழுமணி மன்றத்து
அம்பொன் மேருவுக்கு அடிமுடி இன்றே"

என்பது அப்பாடல். பிசி கூறுபவர்கள் அப்பொருளை எளிதிற்காண ஒட்டாமற் செய்யத் தாம் கூறும் தொடரில் கவர்த்த தன்மையை உளதாக்குவர், ஸ்ரீ சுவாமிகளும் அவ்வண்ணமே பொன்மன்ற மென்றது "மணி மன்றம்" என்றும், "ஆதியந்தம் இல்லை" என்றது "அடிமுடி இன்று" என்றும் அருளினார்கள். இவ்வகையில் இது பிசி அமைதி பொருந்திய திருப் பாட்டேயாகும். அடிவரையறையற்ற செய்யுள் வகைளுகள் ஒன்றைக் குறள் வெண்செந்துறையுள் அமைத்த பாங்கு மகிழ்தற்குரியதாகும்.

இத்திருப்பாடலுள் அதிசய அலங்காரம் அமைந்துள்ளது. மலைக்கு விதானம் இடுதல் இயலாத செயல். மன்றிற்குள் மலை இருக்கிறதென்றால் அதிசயமாகும். செம்பொன் என்றது இனச்சுட்டில்லாப் பண்படையாகும். மரபடையுமாம்.

இத்திருப்பாடலை யொட்டிக்கீழ்வரும் செய்யுளிலக்கணக் குறிப்புக் காணப்பெறுகிறது :—

"இது விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் உடைத்தாய் அடியிரண்டாய்த் தம்மில் ஒத்துவந்தமையால் குறள் வெண்செந்துறை"

நால்வகைப் பாவுக்கும் தாழிசை, துறை, விருத்தம் என்னும் இனங்கள் கூறப்பெறும். அவையன்றிக் குறள் வெண்பாவிற்கு மட்டும் தாழிசை, துறை என்னும் இரண்டு இனங்கள் கூறப்பெறும்.

" அந்தமில் பாதம் அடியிரண்டு ஒத்து முடியின்
வெள்ளைச் செந்துறை ஆகும் "

என்றபடி "செம்பொன் வேய்ந்த" என்னும் செய்யுள் இரண்டடியால் அடிதோறும் நாற்சீரொத்து முடிந்தமையான் குறள் வெண்செந்துறை எனப்பெறுகிறது.

விழுமியபொருள் : இதனின் மிக்கதொரு பொருள் இல்லை என்னுமாறு சிறப்பால் மிக்கதொன்றை விழுமிய பொருள் என்பர். ஸ்ரீமந் நடராஜப்பெருமானினும் சிறந்த பொருள் வேறொன்று இராது. எனவே அதனை உணர்த்தல் விழுமிய பொருளை உணர்த்தலாகிறது.

ஒழுகிய ஓசை : தேனொழுக்குப் போலத் தொடர்ந்தும் இனிதாயும் அமையும் ஓசை. அவ்வண்ணம் இத்திருப்பாடல் அமைந்திருத்தலை இசைத்துக் காண்க. பாடலிடையில், முற்றும், முறிப்பும் கொண்டுகூட்டும் இன்றெனில் ஒழுகிய ஓசை அமையும் என ஒருவாறு கூறலாம்.

"செம்பொன் வேய்ந்த செழுமணி மன்றத்
தம்பொன் மேருவுக் கடிமுடி யின்றே"

என்னுமிப்பாடலுள் உள்ள எட்டுச்சீர்களும் ஆசிரிய உரிச்சீர்கள். தளைகளுள் நேரொன்றாசிரியத்தளைகளும் 4 இயற்சீர் வெண்டளைகளும் உள்ளன. இவையும் ஆசிரியப்பாவிற்குரியன. ஏகாரத்து முடிந்துள்ளமையும் ஆசிரியப்பாவின் தன்மையே. இவ்வகையில் இதனை ஆசிரியப்பாவெனவே கருதலாகாதோ? குறள் வெண்செந்துறை என வேறு பெயர் கூறியதேனென ஓர் ஐயம் நிகழலாம். "மூன்று அகவற்கு இழிபு" என அடியெல்லை கூறினமையால் ஆசிரியத்துள் அடங்காது, 'வெள்ளைக்கிரண்டு' என்றமையால் அடிவரையறையை ஒட்டி "ஈரடிக் குறள்" எனக்கூறப் பெற்றதன் இனமாகிறது.

— *சிவ சிவ*

# விதியை வெல்ல முடியுமா?

நெல்லை சிவமணி புலவர் ம சிவசம்பு. எம். ஏ.,
பாளையங்கோட்டை

பலர் துன்பப்படும் போது தன்னைத்தானே நொந்து கொள் வதைப் பார்க்கிறோம். என் தலை எழுத்து அப்படி! சிவன் இட்ட முடன் என் தலையில் இப்படி எழுதி விட்டான் என்கிறார்கள்.

இந்த அறியாமையை என்னென்று சொல்வது. நம்முடைய இன்ப துன்பத்திற்கு நாமே காரணம் என்பதும் அவ்வினைக்கு நாமே பொறுப்பு என்பதும் பலர் அறிவதில்லை. வினையைக் கடவுள் கொடுப்பதில்லை. நாம் தேடிக் கொள்வது நாம் தேடிக் கொண்ட வினையை அவன் ஊட்டுகிறான். அவ்வளவே அவ்வினையை மாற்றலாம்! தலை எழுத்தை அழிக்காலாம்! முயற்சியால் விதியை வெல்லலாம். இந்த நிலையை உணர்த்தியவர்கள் நம் பெரியவர்கள் மார்க்கண்டேயர் வரலாறு நாம் அறிந்தது தான் தன்னுடைய தவ முயற்சியால் கூற்றுவனை வென்றார், இக்கருத்தை வள்ளுவரும்,

"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு" என்றும்
"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்றுபவர்" என்றும் கூறுகிறார்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்,

"இளைத்தலிலாத முயற்சியையே பற்றுக் கோடாகக் கொண்டு ஊழினது வலிமையைச் சிதைக்கலாம். உலகறிய ஊழ்வினையின் முளையைத்தின்று எமனது உயிரையே குடித்த மார்க்கண்டன் என்ற சிறுவனே இதற்குச் சான்றாவன்" என்று மிகத் தெளிவாக கூறுகிறார்.

உலையா முயற்சி களைகணா ஊழின்
வலி சிந்தும் வன்மையும் உண்டே - உலகறியப்
பால் முளை தின்று மறலி உயிர்குடித்த
கால் முளையே போலுங் கரி

நீதிநெறி விளக்கம் 51

[பால்—விதி; மறலி—எமன்; கால்முளை—பிள்ளை; ஈண்டு, மார்க் கண்டேயர்.]

# ஸ்ரீ குமரகுருபரர்

## 300 - ஆவது ஆண்டு நிறைவு

1988 மே மாதம் முதல் இந்திய அளவில் பல்வே றிடங்களில் ஸ்ரீ குமரகுருபரர் 300-ஆவது ஆண்டு நிறைவு விழாக்கள் நிகழ்த்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அகில இந்தியச் செயற்குழு உறுப்பினர்கள் நியமிக்கப் பெற்று வருகின்றனர். மாண்புயர் டாக்டர் ஜஸ்டிஸ் மு. மு. இஸ்மாயில் அவர்களும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் அகஸ்தியலிங்கம் அவர்களும், முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவ நாதன் அவர்களும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் ஆறு. அழகப்பன் அவர்களும் செயற்குழுவில் இருந்து பல சிறப்புக்கள் செய்ய இசைந் துள்ளார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இந்தியத் தலைநகரில் 1988 செப்டம்பர் மாதமே மிக விரிவாகக் கொண்டாடும் வண்ணம் டெல்லியில் உள்ள செயற்குழு உறுப்பினர்கள் நகல் திட்டமே தயாரித்துள்ளார் கள் என்பது மிக்க உற்சாகத்தைத் தருகிறது.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து ஸ்ரீ காசிமடம் நிதிய வெளியீடாக வெளிவந்துள்ள செய்தி இலக்கியச் சுவைஞர்கட்கும், அன்பர்கட்கும் மிக்க மகிழ்ச்சியைத் தருவ தாகும். பல்லாண்டுகட்குப் பிறகு டாக்டர் உ. வே. சா. எழுதிய குறிப்பினையும் ஸ்ரீ குமரகுருபரர் அருளிய 14 இலக் கியங்களையும் உட்கொண்ட ஒரே நூலாக அடக்க விலையில் நான்கிலொருபங்கு விலையாக வெளிவந்துள்ளது.

நி. ஆ—ர்.

உ
ஸ்ரீ சித்தி விநாயகர் துணை

கும்பகோணம் தலைமை அஞ்சலகத்தின் முன்னர்
கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள

# ஸ்ரீ ஸித்தி விநாயகர் திருக்கோயில்
# திருப்பணிக் கைங்கர்யப் பத்திரிகை

நீர்வளம் நிலவளம் மிகுந்ததும், உலகப் புகழ் வாய்ந்த மாகமகப் பெருவிழா சிறப்போடு பொலிவதும், பொன்னி அரிசில் ஆகிய புண்ணிய நதிகள் இருமருங்கும் ஓடி ஆரமாக அணி செய்வதும், நாயன்மார்களாலும் ஆழ்வாராதிகளாலும் பாடல் பெற்ற சிவ-வைஷ்ணவ ஆலயங்கள் நிறையப் பெற்று கோயில் நகர் எனப் போற்றப்பெறுவதும், புனிதமான தீர்த்தங்களால் சூழப்பெற்று மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய அனைத்துச் சிறப்புகளும் நிறைந்த இக்குடந்தை மாநகரில் மாமகப் புனிதத் தடாகத்தின் அண்மையில் தலைமை அஞ்சலகத்தின் முன்னர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வழிபடுவோரின் பிணி, பகை, துன்பம் முதலிய பல விக்னங்களையும் நீக்கி, இம்மை, மறுமைப் பயன்களை அருளிவரும் ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் உறைந்தருளும் திருக்கோயில் சுமார் 25 ஆண்டுகட்கு முன்னர் கும்பாபிஷேகம் செய்ய பெற்றுள்ளது. இதுபோது மீண்டும் ஜீரணோத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்யவேண்டிய நிலையில் உள்ளது.

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஏனைய மடாதிபதிகளின் அருளாசியுடன் துவங்கபெற்ற இத்திருப்பணி செவ்வனே நிகழுற அன்பர்கள் நிதியாகவோ பொருளாகவோ ஒல்லும் வகையால் உதவி பெருஞ்சாந்தி [விழா சிறப்பாக நடைபெற ஆவன செய்து ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் திருவருட் பெருக்கிற்கு இலக்காகுமாறு வேண்டுகிறோம்.

16—10—1987
கும்பகோணம்

இங்ஙனம்,
**திருப்பணிக் குழுவினர்**

---

நன்கொடையை செக்காகவோ, டிரப்ட்டாகவோ ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத் திருப்பணி நிதி A/c payee என்ற குறிப்புடன் அனுப்ப வேண்டுகிறோம்.

முகவரி: செயலர், ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத் திருப்பணிக் குழு
19, ஸ்ரீ காசிவிஸ்வநாதர் வடக்குவீதி, கும்பகோணம்-612001

# குமரகுருபரஅடிகள் வரலாறு *

கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ., எம் எல்.

சைவசித்தாந்தச் செந்நெறியானது இந்நாட்டிலே, நலிவுற்ற காலங்களிலே பெருமக்கள் தோன்றி மன்னுயிர்க்கு அதன் உண்மையை அறிவுறுத்தினரென்று பெரியார் வரலாறுகளால் அறிகிறோம். ஆசிரியர் மெய்கண்டதேவர் முதலிய சந்தானகுரவர் நால்வரும் அவர் வழி வந்த பெரியாரும் சிவவொளியைப் பரப்பி மறைந்து சின்னாளாகிய பின்னர், வடநாட்டு நாயக்கர் அரசாட்சியிலே வைணவ சமயமும் துலுக்க சமயமும் ஏகான்ம வாதமும், பிறவுந் தலையெடுப்பவாயின. சைவ மடங்களின் வைகிய துறவிகள் தம்மையடைந்தார்க்கே சிவநெறியினைப் போதித் தாட்கொண்டமையால் சைவ நன்மக்கள் பலருஞ் சைவசமயச் சிறப்பினை யறியாதாராய்த் தமக்கு ஒரு சமயத்தலைவரை நாடிநின்றனர். அப்போது செந்தமிழுஞ் சிவமாநெறிக் கொள்கையும் சிறப்புற்றோங்கிய தென்பாண்டியநாட்டிலே தோன்றி அவ்விரண்டும், குமரிமுனை முதற் பனிமலைச்சாரல் வரை மிக்க மாண்பொடுதிகழும் வண்ணம் திருவருட் பெருவாழ்க்கை நடாத்தித் தமது நிறைமொழியால் நாயக்க மன்னரையும் மகமதிய அரசரையும், தமது வயப்படுத்திச் செந்நெறி செலுத்திப் பெருநன்மையாற்றிய பெருந்தகையார் குமரகுருபர அடிகளாவர். ஆதலின் அவர் வரலாற்றினையும் அருள் நூல்களையும் ஆராய்ச்சி செய்தல் நம்மவர் கடமையாகும். அதனை ஒருவாறு நிறைவேற்றக் கருதுஞ் சிறுநூல் இதுவாகும். இதன் குறைகளை அறிஞர் நிரப்புவாராக. இப்பெரியார் சரித்திரத்தைச் செய்யுள் வடிவமாகப் பாடியவர் காலஞ்சென்ற பெரும் பாவலராகிய மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள். அவ

---

* பொன்னம்பல முதலியார் மணிவிழா மலரிலிருந்து வெளியிடப் பெற்றது.

துறைசையாதீனக் கலைத் தலைவராய்த் திகழ்ந்தவர். இனிய நாற்கவிகள் பாடுவதிற்றலைசிறந்தவர். அவரியற்றிய சரித்திரத்தைத் தழுவி அடிகள் வரலாற்றினைத் தெரிக்கின்றும்.

குமரகுருபர அடிகள் தோன்றிய நாட்டின் தன்மையை அழகு மிகப் பகர்வார்,

"செந்தமிழுஞ் சந்தனமுந் திசையெல்லாம் பரிமளிக்க
மந்தவளி யுமிழ்மலய வளர்குடுமி நின்றிழிந்து
கொந்தவிழு மலர்வீசிக் குளிர்கெழுமுத் தெடுத்திறைத்து
முந்தவெழு புனற்பொருநை முழுவளத்த தந்நாடு"

என்றார்.

அந்நாட்டிலே வயல்தோறுங் கயல்மீன்கள் மகிழ்வுற்றுத்துள்ளுகின்றன. எதனாலெனின், உமையம்மை செழியன் மகளாய்த் தோன்றிய காலை, கயற்கொடியுயர்த்தினமையாலும் கயற்கண்ணியென்ற திருப்பெயர் பூண்டமையானும் என்க. இனைய நன்னாட்டிலே, பொருநைக்கரையிலே சைவர்கள் திருக்கயிலை யென்றும், வைணவர்கள் வைகுந்தமென்றும் அழைக்குந்திருப்பதியானது திருநெல்வேலிக்குந் திருச்செந்தூருக்கும் நடுவே நம்மாழ்வார் பிறந்த திருக்குருகூருக்கு மேல்பாகத்தில் உள்ளது. அவ்வூரிலே பரம்பரைச் சைவ வேளாளர் குலத்திலே கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்துவிளங்கிய சண்முக சிகாமணிக் கவிராயர் தமது மனைவி சிவகாமியம்மையாரோடு மகப்பேற்றின் பொருட்டுத் திருச்செந்தூர்ப் பெருமானை உள்ளத்தில் நினைந்து அருந்தவங்கிடந்தார். அத்தவத்தின் பயனாக அவரது கற்புமிக்க மனைவியினிடம் சற்றேறக்குறைய முந்நூறு ஆண்டுகட்குமுன்னே ஒரு அருமைப்புதல்வர் உதித்தனர். பெற்றோர் அளவற்ற மகிழ்ச்சியுடன் அக்குழந்தையைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து அது ஐயாண்டுற்றும் பேசாதிருத்தலைக்கண்டு மிக்க மனக்கவலை எய்தினர். குழந்தைநாளடைவிற் பேசக்கூடுமென்று பலநாள்களாக எதிர்பார்த்திருந்தும், அது பேசாமையறிந்து அது மூங்கைப்பிள்ளையாமென வெண்ணி உளம் நொந்து திருச்செந்தூர்ப் பிரானிடம் அதனைக் கொண்டுவிடக் கருதி அதனை அழைத்துச்சென்றனர். செந்திலம் பதிக்குப் புறப்பட்ட காலை நன்னிமித்தங்கள் கண்டமையால், தாயுந்

தந்தையும் தெளிவடைந்தனர், திருச்செந்தூரடைந்து, முருகப்பெருமானைப் பேரன்புடன் தொழுது, இலைவிபூதிபெற்றுக் கடவுள்பாற் பிள்ளையைப் பெற்றோர் அடைக்கலம் புகுவித்தனர். இலை நீற்றுச் சிறப்பை ஒரு அழகிய செய்யுளிலே துறைசைப்புலவர் பாடினர்,

இலையமில் குமரவேண் முன் வணங்குவார்க் கென்றுந் துன்பம்
இலை அடுபகை சற்றேனும் இலை படுபிணி நிரப்பும்
இலை அளவுறுமுன்று வூழ்தல் இலை பலபவத்துச் சார்பும்
இலை யென இலைவிபூதி யெடுத்தெடுத் துதவல்கண்டார்.

திருச்செந்தூரண்ணல் பேரருளினாலே அருமைப் புதல்வர்க்கு நல்லறிவு விளங்கிற்று. அவர் சண்முகவிலாசமென்னும் முன்மண்டபத்திலே தங்கியிருந்தனர். ஆறுமுகச் செவ்வேள் அருட்டிருவடிவம் அவருள்ளக் கண்ணிற்குப் புலனாயிற்று. அவ்வடிவத்தையே நினைந்து தொழுதிருக்கு நாளிலே, ஒருநாள் குமரவேள் அடிகட்குத்தோன்றி "நீயார்" என்று வினவியருளியவுடன், அவர் வாய்திறந்து 'அடியேன்' என்றார். இறைவன் அவருக்குச் சைவசித்தாந்த உணர்ச்சி நல்கிக் குருபரன் என்ற திருப்பெயருமிட்டு மறைந்தருளினர். அடிகள் தமக்குப் பரஞானம் தமது வாக்கிற்குந் தடை ஏற்படுமிடத்தே கிட்டுமென்றறிவுறுக்கப்பெற்றார். அன்று முதல் அடிகள் தூயதவவேடத்துடன் துறவு வாழ்க்கை நடத்துவாராயினர். திருச்செந்தூர்ப் பிரான்மீது கந்தர்கலிவெண்பா வென்ற அழகிய பொருள்வளமிக்க பாமாலை தொடுத்தனர். அடிகளது பெற்றோரும் பிறரும் அவரைக் குமரகுருபரரென்றழைக்கலாயினர், பின்னர் அடிகள் தம்மூர்க்குச் சென்று அத்திருப்பதியில் வைகுங்கயிலைநாதர் மீது "கயிலைக்கலம்பகம்" என்னுஞ் செவ்விய சிறுகாப்பியமியற்றினர். இந்நூலின் ஒரு பகுதியே கிடைத்துத் திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் குமரகுருபர அடிகள் நூற்றொகுதியுட் சேர்க்கப்பட்டது. எட்டு பாடல்களே கிடைத்தபோதிலும், அதில் "வைகுந்தக்கயிலேசர்" என்ற சொற்றொடர் காணப்படுவதால், அது அடிகள் பிறந்த ஊர்க்குரியதென்பது தெளியப்படும்.

பின்னாட் சென்றபின் அடிகள் திருநெல்வேலி, திருக்குற்றாலம், திருச்சுழியல், திருக்கானப்பேர், திருவாடானை, திருப்புனவாயில்,

திருக்கொடுங்குன்றம், திருப்புவனம். திருப்புத்தூர்; திருப்பெருந்துறை, திருவிராமேச்சுரம், திருப்பரங்குன்றம் முதலிய தலங்களை வணங்கிக் கூடன்மாநகரம் வந்தடைந்தனர். அங்குள்ள பெரியாரெல்லாம் அடிகளை எதிர்கொண்டு மிக்க சிறப்புடன் வரவேற்றனர். அப்பெரும்பதியிலே திருமலை நாயக்கர் என்பவர் அரசுவீற்றிருந்தார் அவண், அங்கயற்கண்ணி சந்நிதியிலுள்ள ஒரு திருமடத்திலே அடியார்கள் தங்கும்படி வேண்ட அடிகள் அமர்ந்து அம்மைமீது பிள்ளைத்தமிழொன்று பாடியருளினர். அம்மை கனவிலே திருமலை நாயக்கர்க்குத் தோன்றி ,என்புதல்வன் திருவருள்பெற்றுப் பாடிய செந்தமிழ்ச் சிறுநூலை நான் கேட்க விரும்புகிறேன்' என்றருளிச் செய்து மறை:.வுடன், அரசன் எழுந்து அமைச்சர் முதலியோரைக் கூவி நம்மூரிலே வந்திருக்கும் பெரியவர் யாரென்று வினவ அதற்கவர்கள் வைகுண்டநகரத்திலே பிறந்து ஐந்தாவது ஆண்டுவரை ஊமையாயிருந்து திருச்செந்திலாதிபன்திருவருளாற் பேசுந்தன்மையும் பாடுமாற்றலும் பெற்றுத் துறவுபூண்டு சிவவேடத்துடன் பல திருப்பதிகளுக்குச்சென்றுதொழுது இவண் போந்துள்ள குமரகுருபர அடிகளென்பார் அங்கயற்கண்ணம்மைமீது ஒரு பிள்ளைக்கவிப் பிரபந்தம் பாடியுள்ளார் என்றனர். பின் அவர்கட்கு அரசன் தன் கனவினைத் தெரிவித்து அவர்களுடன் அடிகள் வைகும் திருமடத்திற் கேகி, அடிகளைவாழ்த்தித் தொழுது அம்மைமீது பாடிய சிறு காப்பியத்தைத்தான் கேட்க வ்ரும்புவதாகக் கூற "அவ்வாறேயாகுக" என்று பணித்துத் திருநீறளித்தார். நாயக்கர் அதனை யேற்றணிந்து நன்னுள் ஒன்று குறித்து அந்நாளிலே அரங்கேற்றந் தொடங்குவித்தார். அடிகள் கயற்கண் நாயகியை வணங்கி அரசன் முதலிய யாவருங்கூடிய பேரவை பெருமகிழ்வெய்தும் வண்ணம், பிள்ளைத்தமிழினைத் தமது பெருஞ்சொல்லால் விளக்குவான் புகுந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பருவமாகப் படித்துவரும் போது வருலைகப்பருவம் ஓதுங்காலத்தே அங்கயற்கண்ணி, அருச்சகரின் குழந்தை வடிவினளாய்த் திருமலை நாயக்கர் மடிமீது வீற்றிருந்தாள். அப்பருவத்திலே "தொடுக்குங் கடவுட் பழம்பாடல்" என்ற திருப்பாடலைப் பாடியபோது அரசன் கழுத்திலிருந்த முத்தாரத்தை எடுத்து அடுத்த பாட்டு முடிவதற்குள் அடிகள் கழுத்திலிட்டு மறைந்தருளினள். இவ்வியப்புமிக்க அருட்

செயலைக்கண்டு எல்லாரும் இறும்பூதெய்திப் பேரானந்தக்கடலிற்றிளைத்தனர். இதனைக் கண்ணுற்ற மன்னர், அடிகள் பெருமானின் பிள்ளைத்தமிழ் அரங்கேற்றி முடித்தபின் அடிகளைச் செம்பொன்னாலியற்றிய அரியணைமீதிருத்தி, அவர் திருமேனியைப் பொன்னாலும் மணியாலும்முழ்குவித்து 'வீரக்கழலை அவர் திருவடியிற் சாத்தினர் யானை, குதிரை, சிவிகை, குடை, கொடி முதலிய பல விருதுகளுங் கொடுக்கப்பட்டன. அடிகள் மதுரைத் திருமடத்திலே சின்னாளிருந்தருளவேண்டுமென்று, அரசன் கேட்டுக்கொண்டதற்கிணங்கி, அவண் இருந்து மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மையிரட்டைமணிமாலை முதலிய அரிய பிரபந்தங்களைப் பாடியருளினர். நாயக்கமன்னர் கருத்துப்படி "நீதிநெறி விளக்கம்" என்னும் அழகிய நீதிநூலியற்றியதற்குப் பரிசிலாக இருபதினாயிரஞ் சிறுபொன் வருவாயுடைய அரியநாயகிபுரம் அவர்க்கு நன்கொடையாக அளிக்கப்பட்டது. அம்மையைப்பாடியவாறே ஐயனையும் பாடவேண்டுமென்ற அடியாரது விருப்பை நிறைவேற்றுவான் அடிகள் திருவாலவாய்ப் பெருமான் மீது மதுரைக்கலம்பகமென்ற செந்தமிழ்மாலை தொடுத்தனர்.

பின்னர், குமரகுருபரர் வடதிசையை நோக்கிப் புறப்பட்டுத் திரிசிராப்பள்ளியடைந்து அவ்வூர் மன்னனாற்பெரிதும் போற்றப்பெற்று அங்கு வீற்றிருக்கும் பெருமானையிறைஞ்சி அவண் வைகினர். ஆயகாலை, திருவரங்கத்தில் வதிந்த வைணவப் பாவலராகிய பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் அரசனையும், அடிகளையுங் கண்டு உரையாடினர். இருவரையும் நோக்கி அரசன் தமது அரசாங்க நாணயமாகிய பொற்காசிலே எவ்வடையாளம் பொறித்தற்பாலதென்று வினவ, ஐயங்கார் 'கருடன்" என்றார். அடிகள் "விடை" யென்றார் "கருடன் பறந்து வட்டமிட்டுச் சென்றுவிடும், விடை முட்டமுட்டச் செல்லும் நலத்தது" என்னும் நயவுரை கேட்ட மன்னன், காசுகளின் மீது விடை பொறிக்கும்படி கட்டளையிட்டனன்.

அவண் நின்றும் புறப்பட்டுக் குமரகுருபரப்பெருமான், வாட்போக்கி, கடம்பர்துறை' ஈங்கோய்மலை' திருப்பராய்த்துறை, திருப்பாச்சிலாச்சிராமம் திருப்பைஞ்ஞீலி திருவானைக்கா, திருமூக்கீச்சரம், திருக்கற்குடி, திருவெறும்பியூர்; திருக்காட்டுப்பள்ளி முதலிய பல

திருப்பதிகளையும் வணங்கித் திருச்சிராப்பள்ளிக்கு மீண்டனர். அத்தருணம் பிள்ளைப்பெருமாளையங்கார் தமது வைணவத்தொண்டரொருவர் வாயிலாகச் சமய வாதம் செய்யுங் கருத்தை அடிகட்கு அறிவித்தார். இருவருக்குந் திரிசிரபுர நாயக்க மன்னர் பேரவையில் நிகழ்ந்த வாதில், அடிகள் சிவனது முழுமுதற்றன்மையை நிலைநாட்டி அரசனளித்த பரிசு பெற்றனர்.

சின்னாட்கழியவே, குருபரர் வடதிசை யாத்திரை கருதிப் புறப்பட்டுச் செம்பொற்சிவிகை ஏறிச் சின்ன முழங்கக் குடை நிழற்றப் பரிசனத்துடன் போந்து அன்பிலாலந்துறை, திருக்கானூர், திருமழபாடி, திருநெய்த்தானம்' திருவையாறு, திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர், திருச்சோற்றுத்துறை, திருப்பழனம் முதலிய திருப்பதிகளைத் தொழுதனர். திருக்குடந்தை, திருவிடைமருதூர் முதலிய பெரும்பதிகளைப்போற்றிப் போய்த் திருவாவடுதுறையடைந்து, அடியார் குழாங்களால் எதிர்கொள்ளப்பெற்று, இறைவனையும், திருமூலர் திருமாளிகைத்தேவர், நமச்சிவாயதேசிகர் முதலிய பெருமக்களையும் நனிதாழ்ந்திறைஞ்சி, ஆதீனத்தலைவர்பால் விடை பெற்றேகினர். அப்பால் திருமயிலாடுதுறைப் பெருமானைப் பரவித் தருமபுரவாதீனம் நண்ணித் தம்பிரான்மார்களால் வரவேற்கப்பெற்றுத், திருமடத்துக்குச்சென்று, ஆதீனத்தலைவரை வணங்கி அவர் அண்மையிலமர்ந்தனர். அப்போது ஆதீன முதல்வராய்த் திகழ்ந்த மாசிலாமணி தேசிகர், அடிகளை நோக்கி''ஐந்துபேரறிவு''என்னும் பெரியபுராணத் திருப்பாட்டின் அனுபவப்பொருளை வினவ அடிகட்குத் திகைப்புத் தோன்றியது. திருச்செந்தூர்ப் பிரானருளிச்செய்ததை உடனே நினைந்து, தேசிகர் திருவடியிற் சரண்புகுந்து அவர்பால் உரியவகையாற்றீக்கை பெற்று மெய்யறிவுரை (ஞானோபதேசம்) பெற விரும்பினர். தேசிகர் அடிகளைச் சிதம்பரயாத்திரை செய்து மீளும்படி பணித்தனர்.

குருபரர் அவ்வாறே விரைவிற் புறப்பட்டுத் தருமையாதீன முதற்றலைவரின் பரமாசாரியார் வீற்றிருந்த திருவாரூர் தொழ விரும்பி, அவண் சென்று திருவீதியைச்சூழ்ந்து தேவாசிரியனை வணங்கித் திருக்கோயிலுட் புகுந்து புற்றிடங் கொண்டாரையுந் தியாகேசரையும் ஆ ர் ர் த கா த லு ட ன் தாழ்ந்திறைஞ்சினர்,

அரிதிற் புறம்போந்து ஒரு திருமடத்தினமர்ந்து "திருவாரூர்நான்மணிமாலை" பாடி இறைவர் திருமுன் அதனை அரங்கேற்றினர். அவ்வூரிலிருந்த சிவசமவாதியர் சிலரோடு வாதாடி அவர்கட்குச் சித்தாந்தவுண்மையைத் தெள்ளிதின் விளக்கிப் பெரும்புகழ் படைத்தனர்.

பிறக்க முத்திதரும் அத்திருப்பதியை அகன்று வழியிலுள்ள தலங்களையும் பணிந்து புள்ளிருக்குவேளூர் வந்தடைந்தனர். அங்கே தம்மையடைந்தாரது உடற்பிணியும் பிறவிப்பிணியும் ஒழிக்கவல்ல மருந்தீசரையும் தையல்நாயகியம்மையையும் வணங்கிப் பரமாசாரியரான முத்துகுமாரசாமியையும் பேரன்புடன் வழிபட்டனர். அவண் ஒரு திருமடத்திலே அடிகள் துயில்கொண்டபோது, குமரவேள் அடிகள்கனவிற்றோன்றி 'இவண் நீ என்னைப்பாடாமைக்கேதுவென்னை யென்று வினவித்திருநீறளித்து மறைந்தருளினர்

குருபரர் உடனே எழுந்து திருவருளை வியந்து மறுநாட்காலையிலே"முத்துக்குமாரசுவாமிபிள்ளைத்தமிழ்"பாடி முருகனுக்கு ஏற்பித்தனர். அப்பால் அவ்வூர் நின்றும் போந்து திருக்கழுமலமுதல்வரை வணங்கிப்போய்த் தில்லை யெய்தினர்.

ஆண்டுத் தம்மை எதிர்கொண்டு வ்ரவேற்ற அடியாருடன் சென்று தில்லைப்பெருமான் திருநடங்கண்டு களித்து எல்லை யில்லதோர் இன்பமார்ந்து அவண்வைகிச் சிதம்பரமும்மணிக்கோவை செப்பினர். அடிகள் யாப்பிலக்கணம் வல்லரோவென்ற ஒருவரது ஐயுறவு நீங்க, இலக்கணப்படி அமைந்த பாவும் பாவினமுஞ் செறிந்த சிதம்பரச்செய்யுட் கோவையை இயற்றியருளினர். குமரகுருபரனார் தம்மையடைந்தவருக்கு அரிய நுண்பொருள் பலவும் அறிவுறுத்தி ஆயிரக்கால் மண்டபத்தமர்ந்திருந்த காலை ஆண்டுக்குழுமிய ஏகான்மவாதியர் சிலருடைய மயக்கந் தீரும்பொருட்டுச் சைவ சித்தாந்தப் பேரறிவுப் பெருஞ்சுடர் கொளுத்தினர். சிவகாமியம்மை யிரட்டை மணிமாலையும் அங்கேயே பாடப்பெற்றது.

பின்னர், அடிகள் தருமபுரம்போய் மாசிலாமணி தேசிகர் பால் ஞானோபதேசம் பெற்றுத் தமது உடல், பொருள் ஆவி மூன்றையும்

அவரிடம் ஒப்புவித்தனர். அவர்மீது பண்டாரமும்மணிக்கோவையென்ற அரிய பிரபந்தமும் பாடியருளினர். அடிகள் ஒப்புவித்த பெரும்பொருளைத் தேசிகர் அடிகளிடம் திரும்பக்கொடுத்துக் காசிக்குப்போய்ப் பல அறங்களையும் அது கொண்டியற்றுமாறு பணித்தனர். ஞானதேசிகர் கட்டளையைச் சென்னிமேற்கொண்ட குருபரனர் காசிச்செலவை மேற்கொண்டனர், வழியிலுள்ள திருவேகம்பம், திருக்காளத்தி முதலிய தலங்களிற் பெருமானைத் தொழுது சென்று அடிகள் காசிமாநகரையடைந்தனர். அங்கே கங்கையிலேமூழ்கி விசுவேசரைப் பேரன்புடன் வழிபட்டுத் துண்டிவிநாயகர் மீது ஒரு திருப்பதிகமும் சிவபெருமான்மீது காசிக்கலம்பகமும் பாடியருளினர், ஆனந்தவனமாகிய காசியிலே குருபரனர் ஆனந்தமாக வீற்றிருந்தார்

"ஆனந்த முயிர்க்கெய்த ஆனந்த வல்லியோடும்
ஆனந்த மகார்களோடும் ஆனந்த வனத்துமேய
ஆனந்த வடிவார்தம்மை யானந்தச் செய்யுள்பாடி
ஆனந்தம் பயப்பப்போற்றி ஆனந்த மெய்துநாளில்"

காசியிலே பல அறங்களையு மியற்றுதற்குரிய இடம் பெறுவான், அந்நகர் வேந்தனைப் பார்க்கக் கருதினர். அரசரது பேச்சு வேறு மொழியிலிருந்தமையால், அம்மொழி தமக்குக் கைவரும்வண்ணம் வெண்கமலச் செல்வியைப்பாடினர். கலைமகள் மீது பாடிய பதிகம் சகலகலாவல்லி மாலையெனப்படும். கலைமகள் அடிகட்குத் தனது காட்சி நல்கி இந்துத்தான மொழியின் பெற்றியை அவர் உள்ளத்திற் பதிவித்தருளினள். குருபரனர், துருக்கிய குருக்கள் பாற்சென்று அன்னோர் மொழியிற்பேசி அவர்களுடைய ஐயங்களைத் தீர்த்தவுடன், அவர்கள் வியந்து அடிகளைத் தமது அரசன் பாலெய்துவித்தனர். முதலில் அரசன் அவர்க்குத் தக்க இருக்கை நல்காமையின், குருபரனர் ஒரு சிங்கமூதுகின்மேலேறிச் சென்றாரென்ப. மகமதிய மன்னன் அவரது திருவருட் பேற்றினையுமிக்கதவ ஆற்றலையுங் கடலனைய கல்வி நலனையுங் ஒழுக்கமாண்பையுங்கண்டு அவருக்கு மிக்க சிறப்புச்செய்தான். அடிகளது சொல்வன்மையைக் கண்டு வியவாதாரில்லை. காதலைப் பற்றி அடிகள் பெருஞ்சொல் நிகழ்த்தினல், கேட்டார்யாரும் காம

வேட்கையுடையவராவர். போரினைப்பற்றி அவர் பேசினல் முதியோருஞ்சினங்கொண்டு போர்க்கெழுவர். அத்தகைய மாண்புணர்ந்த அரசன், அடிகள் வீற்றிருந்தறஞ்செய்யத் திருமடமொன்மைத்துக் கொடுத்தான். அவண் அமர்த்து. அடிகள் எவ்வுயிர்க்கும் பசிப்பிணி நீக்கிப் பிற அறங்களும் ஆற்றிச் சிவபெருமானை வணங்கியினிதிருந்தனர். கங்கைக்கரையிலே திருமடத்திற் கருகிலிருந்த திருக்கேதாரநாதர் கோயிலைச் சீர்செய்து அங்கே தென்னாட்டுப் பூசனை நியமங்களை ஏற்படுத்தினர்.

இங்ஙனமிருக்கும் நாளில் அரசற்குக் குருபரனர் மீது அன்பு வளர்வதைக்கண்டு அழுக்காறு கொண்ட மகமதியக்குருக்கள் ஒருங்குகூடி அதனைக் குறைப்பதற்குச் சூழ்ச்சி முயன்றனர். அவர்கள் தமது மன்னன் பாற்சென்று கூறியதாவது "குருபரனர் கல்வியிற்சிறந்தனராயினும், மெய்க்கடவுளை வழிபடுபவரல்லர். அவரைக்கூவி வினவுக, என்பதே. அரசன் அடிகளைத் தனது குருக்கண்மாரோடு சமயவாதஞ் செய்விக்கக்கருதி வரவழைத்தான். குருபரனர் மகமதியவாதிகளை நோக்கி "நீவிர் கூறுவதியாது" என்றனர். அவர்கள் "உமது தெய்வம்பொய், அது மெய்க்கடவுளானல், பழுக்கக்காய்ச்சிய இரும்பை உள்ளங்கையிலேந்திச் சோதனைதருக" என்றறைந்தனர் அடிகள் புன் முறுவல் பூத்து ',அங்ஙனமேயாகுக" என்றவுடன் அவர்கள் குட்டினல் மிகச்சிவந்த இரும்புத்துண்டைக் கொணர்ந்தனர். திருவருளை நெஞ்சிலே நினைந்து அடிகள் "சிவபெருமானே முழுமுதற் கடவுளென்பது உண்மையாயின், யான் அவனடித் தொழும்பனென்றல், அவ்விரும்பு என்னைச்சுடாதொழிக" வெனப்பகர்ந்து அதனைத்தமது திருக்கையில் எடுத்தேந்தி யாதொரு ஊனமுமின்றி விளங்கினர், உடனே அரசன் நடுநடுங்கிக் குருபரனர் திருவடியிலே விழ்ந்திறைஞ்சித் தானிளைத்த பெருந்தீங்கினைப் பொத்தருள்கவென்று குறையிரந்தான். அவையோரெல்லாரும் முழுமுதற் பரம்பொருளைச் சிவனெனத் தெளிந்தனர். துருக்கியக் குருக்கள்யாவரும் அளவற்ற இகழ்ச்சிக்குந் துயரத்திற்குமுள்ளானர்கள். அன்னேர் செய்த சூழ்ச்சி சைவத்தின் மெய்ப்பெற்றியை விளக்கினமையறிந்து அடிகள் மகிழ்ந்தனர், குருபரனர் யாவற்றையும் பொதுப்படநோக்கும் விரிந்த வுணர்ச்சியுடையரல்லர் போலுமென்ற ஐயம்நீக்கு

தற்பொருட்டு ஒருநாள் அரசன் அடிகளைத் தம்மவரோடு உடனுண்ணும்படி வேண்ட, அடிகள் அதற்கிசைந்து தமது பணியாளர் ஒருவனைப் பாத்திரத்திலே செவ்வலரி மலரைவைத்து மூடிக்கொண்டு வரச்செய்து அரசன் உணவுச்சாலைக்கு எழுந்தருளினர், அரசன் அப்பாத்திரத்தில் உள்ளது யாதென்றுவினவ, அதுபன்றியூன் என்னவே, அரசன் மிக வெறுப்புக் காட்டியபோது, குருபரனர், அரசனை நோக்கி அது விருப்பு வெறுப்பின்மைக்கு மாறாகும் எல்லாப் பொருளும் இறைவனாற் படைக்கப்பட்டமையின் அவற்றையெல்லால் ஒன்றுபோலக் கருதல்வேண்டுமென்றுரைத்து பின்னர் ஆரசனோடுடனுண்ணுங்காலை, புலாலுணவுகளை மரக்கறி உணவுகளாக மாற்றியருந்தி அரசனுக்குச் சைவ உணவின் சிறப்பையும் புனிதத்தையுந் தெள்ளிதிற் புலப்படுத்தியருளினர்;

இவ்வாறு பல அற்புதச் செயல்களாற்றிப் பல அறங்களையும் வளர்த்து வருங்காலை, சிவக்கண்மணி நன்கு விளையும் இமயமலைச் சாரலில் ஒருதிருமடம் அமைக்கக் கருதினர். அக்கருத்தை வாகீச முனிவரென்னுந் தம்பிரானுக்கறிவிக்க, நேபாள நாடுசென்று, முகரங்கியென்றுமிடத்திலே ஒருதிருமடம் நிறுவிச் சைவர்யாவர்க்கும் கண்மணிகளை அவண் நின்றுங் காசிக்கனுப்பினர்.

சிவபிரானோடு கலப்பதற்குரிய காலம் நெருங்கியவுடன் அடிகள் தமது மாணவர் பலருள்ளுஞ் சிறந்த சொக்கநாத முனிவரைத் தமக்குப்பின் அறங்களை வழுவாது ஓம்புதற்பொருட்டுத் தெரிந்தெடுத்து அவர்க்கு அறிவுரையுணர்த்தி முருகப்பெருமானைப் பூசனை புரியக் கட்டளையிட்டு, வைகாசித்திங்களிலே தேய்பிறைப் பக்கம் மூன்றும் நாளிலே விசுவேசர் திருவடிக்கமல நிழலிலே "ஒன்றியொன்றுது மேவி யுலப்பிலாளந்தமுற்றுர்" அவர் கங்கையுண் மறைந்தனரென்ற கதையுங்கேட்கப்படுகிறது.

# நூல் நிறை

## 1. சந்தியாவந்தன சைவ அநுஷ்டான நியமம்

[தொகுத்தருளியவர்கள்: ஸ்ரீசிவாக்கிரயோகிகள் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி பண்டார சன்னதி அவர்கள். பக்கங்கள் 30 + 10 விலை ரூ. 3 கிடைக்குமிடம் மணிவாசகமன்றம் அரியலூர் 621704]

மந்திரங்கள், சுத்திகள், ஸ்பரிசம், ஸ்நானம், கரநியாசம், ஆசமனம், பிராணயாமம், சிவதீர்த்த ஹரணம் மந்திராபிஷேகம், மார்ச்சனம், அகமர்ஷணம் ஆசமனசகளீகரணம், கவசவேஷ்டணம், தருப்பணம், ஜபநிவேதனம், தோத்திரங்கள் முதலியவை பற்றிய மிக அரிய கருத்துக்களின் களஞ்சியமாக இத்தொகுப்பு விளங்கிறது. வெற்றுச்சொல் ஒன்றுகூட இல்லாத நூல் என்று இதனைச் சொல்லலாம் சமய வேட்கை உள்ளவர்கள், பூஜகர்கள், பக்தர்கள் ஆகியோர் கட்டாயம் இந்நூலைப் படித்தேயாக வேண்டும்.

இத்தொகுப்பின் அருமையை அறிந்துகொள்ள மாதிரிக்கு ஒரு பகுதி:

"மந்திரங்கள் முன்னால் ஓம் என்ற பிரணவ மந்திரத்தோடும், பின்னால் 1 நம 2 சுவாஹா 3 சுவதா 4 வஷட் 5 வெளஷட் 6 ஹூம் 7 பட் என்ற ஏழு மந்திரங்களுடனும் சேர்த்தே சொல்லப்படும் இந்த ஏழு மந்திரங்களும் பின் அதாவது கோடி (கடைசி)யில் சொல்லப்படுவதால் சப்தகோடி மந்திரங்கள் என்று சொல்லப்படுகின்றன. ஏழு மந்திரங்களும் அவை சொல்லப்படுவதனால் ஏற்படும் பயன்களும் கீழ்வருமாறு:-

1 நம:- பொருவது 2. சுவஹா - திருப்தி செய்வது 3 சுவதா தைரியம், வசீகரம் தருவது. 4 வஷட் - வசப்படுத்துவது. 5 வெளஷட் - அழைப்பது 6 ஹூம் - காதிகளை நீக்குவது. 7. பட் - விக்கினங்களைப் போக்குவது.

## 2. இரு பெருமக்கள்

(ஓர் ஆராய்ச்சி நூல்)

*[ஆக்கியோர்: திருசிரபுரம் பெருஞ்சொல் விளக்கனர் முதுபெரும் புலவர் - அ. மு. சரவண முதலியார் அவர்கள். பக்கங்கள் 16+163 விலை ரூ 2. கிடைக்குமிடம் மணிவாசக மன்றம் அரியலூர் 621704]*

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் என்னும் இருபெருமக்களின் அருள் வாழ்வைத் தெளிவு செய்து அறிவிக்கும் நூலாகும் இது. வராற்றினையொட்டிச் செய்தளிக்கப் பெற்றிருக்கும் சரித்திர ஆராய்ச்சிப் பகுதி மிகுபெரும் அறிஞர்களெல்லாம் போற்றிக் கொண்டாடியதாகும். இது தமிழறிஞர் பெருமக்களெல்லாம் நன்கு கற்றுப் பாராட்டிய பிரசித்தமான நூல். தற்போதும் விலைமாற்றமின்றிக் கிடைப்பதினால் அந்த நல்வாய்ப்பைத் தமிழன்பர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

## 3. ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய ஸ்ரீகாமக்ஷி ஸ்தோத்திரம்

*[பதிப்பு: ஸ்ரீ காமகோடி ஆய்வுமையம், ஆஸ்ரமம். 46A. கல்யாணராமன் தெரு, கும்பகோணம் 612001 பக்கங்கள் 4+16+4. விலை ரூ 1.]*

தனி நூலாக இது வெளி வருவது இதுவே முதன் முறையாகும். தேவநகரி தமிழ் எழுத்து வடிவங்களில் நூல் உள்ளது. கும்பகோணம் D. S. இராமமூர்த்தி அவர்களின் தெளிவுரை பொருளுணர்ந்து படித்தறிய உதவுகியது. புலவர் வே. மகாதேவனின் ஆய்வு முன்னுரை இந்நூல் ஆதிசங்கரர் அருளியதே என மெய்ப்பிக்கிறது சரஸ்வதி மகாலில் உள்ள பிரிதியின் படமும் வெளியிடப் பெற்றுள்ளது.

அன்னை காமாட்சியை வருணிப்பதில் இந்நூல் நிகரற்றது என்று சொல்லலாம். ஆறும் ஸ்லோகம் ஈடு இணையற்றதாக நம் உள்ளத்தை ஈர்க்கிறது. அதுவும் அதன் தெளிவுரையும் வருமாறு:

ஓங்கார கணபதிபிகாமுபநிஷத் ப்ராஸத பாராவதீம்
ஆம்னயாம் புதிசந்திரிகா மத்தம ப்ரத்வம்ஸ ஹம்ஸப்ரபாம்

காஞ்சீடிட்டன பஞ்சசான்தாஷகீம் காருண்ய கல்கீலாலினீம்
காமாக்ஷீம் ஸ்ரீவகாமராஜ மகிஷீம் வந்தேமஹேசப்ரியாம்''

''ஓங்காரம் என்பது ஒரு கூடம் அக்கூடத்தில் ஒளிவிடும் விளக்கு இவள். உபநிஷத் என்பது உப்பரிகை. அதில் தங்கும் ஒரு ஒரு புறா இவள். வேதங்கள் என்பது கடல். இவள் அக்கடலில் படர்ந்த நிலா. பாபம் என்பது இருள் இவள் அவ்விருளை நீக்கும் சூரியன். காஞ்சி நகரம் ஒரு கூடு. இவள் அக்கூட்டில் வாழும் கோகிலம். இவள் கருணை அலைபாயும் நதி. மகேஸப்ரியை. இவளை வணங்குகிறேன்.

## 4. சைவசமயச் சான்றோர் சரித்திரங்கள்

[தொகுத்துப் பதிப்பித்தோர்: திரு. அ. கி. ஆனந்த செட்டியார். பக்கங்கள் 8+128 கிடைக்குமிடம் திரு. அ. கி. ஆனந்தசெட்டியார். ஜவுளி வியாபரம் சித்தூர், (ஆந்திரா) PIN: 517001; ஐம்பது காசு அஞ்சல்தலை அனுப்பி இந்த இலவச வெளியீட்டைப் பெறலாம்.]

திரு. அ. கி. ஆனந்த செட்டியார் அவர்கள் ஆழமான சைவ சமயப் பற்றுடையவர் இவர்கள் சைவச்சார்பான நூல்களையே படிக்கவும், படிப்பிக்கவும், கேட்கவும் வேண்டும் என்னும் நல்லெண்ணத்துடன் பல சேவைகளைச் செய்து வருகிறார்கள். அவ்வகையில் இவ்வெளியீடும் ஒரு தொண்டாகும்.

சிவபுராணபடன விதி, ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் புராணம் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம், திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம், சுந்தரமூர்த்தி சுவாமிகள் புராணம், மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு என்னும் தலைப்புக்களில் ஆறு கட்டுரைகள் இந்நூலுள் உள்ளன. எளிய நடையில் அரிய சான்றுகளுடன் கட்டுரைகள் அமைந்துள்ளன. அச்சிட்ட வரலாற்று வரிசையை ஒழுங்குபடுத்தியிருக்கலாம். ஒருவேளை அவர் உள்ளத்தினை ஈர்த்தநிரலில் இருக்கலாம். அப்படியென்றால் அதை எங்கேனும் குறித்திருக்கலாம்.

ம. வே. பசுபதி

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

( மாதப் பத்திரிகை )

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச்சாந்தியைத் தரும் அருமருந்தாக இந்தப் பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிகமறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

உள்ளத்தைப் பண்படுத்தும் இந்து மதத்தின் சிறந்த கருத்துக்கள் உங்கள் குடும்பத்தினருக்கு எப்போதும் கிடைக்கச் செய்ய ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை ஆயுள் சந்தாதாரராகச் சேருங்கள்.

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருடச் சந்தா | ரூ. 22 |
| ஆயுள் சந்தா | ரூ. 250 |
| தனிப் பிரதி | ரூ. 2 |

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம் தொலைபேசி

ஸ்ரீராமகிருஷ்ண மடம் 71959

மயிலாப்பூர் : சென்னை 600 004. 71231

## ஆலயபூஜைப் படிக்காசு நிதி

### நன்கொடை அளித்த அன்பர்கள் விபரம்

| திரு/திருமதி | | |
|---|---|---|
| | முன் இருப்பு | ரூ 27121—65 |
| சேலம் A. பாலசுப்ரமண்யம் | | 60—00 |
| குடந்தை துர்க்காகுடில் அப்பு | 5 + 5 | 10—00 |
| திருவனந்தபுரம் K S. மூர்த்தி | | 5—00 |
| மாயவரம் சுப்ரமண்யம் | | 10—00 |
| உக்கரை கைலாசம் | | 5—00 |
| வெள்ளகோவில் R. C. சாமிநாதன் செட்டியார் | | 5—00 |
| சென்னை V. S. சாஸ்திரி | | 10—00 |
| திருப்பனந்தாள் P. சீனுவாசன் | | 2—35 |
| | ஆக | ரூ 27219—00 |

| | |
|---|---|
| தலிச்சங்காடு ஸ்ரீ சங்காரண்யேஸ்வரர் ஆலயச் செலவு | ரூ 90—00 |
| பாணுதுறை ஸ்ரீ பாணபுரீஸ்வரர் ஆலயச் செலவு | 75—00 |
| திருந்து தேவன்குடி கற்கடேஸ்வரர் ஆலயச் செலவு | 90—00 |
| சேங்கனூர் ஸ்ரீ சத்தியகிரீஸ்வரர் ஆலயச் செலவு | 67—50 |
| ஆக | ரூ 322—50 |


Phone No : 222 "Tel Add." "JEWELLERY"
PT.N. G. S. T. No: 209126. Post Box. No. 14
LNo. 8/77. Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

**ஸ்ரீநடராஜ விலாஸ்**

**ஜுவல்லரி ஹால்**

**சிதம்பரம்**

முகவரி

**ச. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்**

உரிமையாளர்கள் :

நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்

26, 27, 28, கடைத்தெரு, சிதம்பரம்

தென்னார்க்காடு மாவட்டம்—608 001

காஞ்சிப் பெரியவர் திருவருளாணையின் வண்ணம்

# "மூவர் தேவாரம் - அடங்கல்முறை"

வெளியிடப்படவுள்ளது. ஒவ்வொருவர் இல்லத்திலும் இருக்கவேண்டிய அரிய நூல். ஸ்ரீ காசிமடத்தின் முதற் பதிப்பிலிருந்து அநுமதிபெற்று வெளியிடப் பெறுவது.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் அருளிய திருப்பதியங்கள் அனைத்தும் ஸ்தலவாரியாக ஒரே நூலில் பதிக வரலாற்றுக் குறிப்புடன் இடம்பெறும்.

டிம்மி ஆக்டோவாசைஸ்; தரமான தாளில் அச்சிடப் பெற்றுவரும் 1800 பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை இருநூறு ரூபாய் ( 200 / — ) 15 — 1 — 88க்குள் முன் பணம் அனுப்புவோர்களுக்குச் சலுகைவிலை ரூ 100 / — ( நூறு ) மட்டுமே.

மிகக்குறைந்த பிரதிகளே அச்சிடப் படுகின்றன. இச் சலுகையைப் பெறவிழைவோர்

ஸ்ரீ காமகோடி ஆய்வுமையம்,
46A, கல்யாணராமன் தெரு,
கும்பகோணம் 612001

என்னும் முகவரிக்கு D. D. அனுப்பிப் பதிவுசெய்து கொள்ளுமாறு கோரப்படுகிறார்கள்.

# குமரகுருபரர் கண்ட நடம்*

டாக்டர் கோமதி சூரியமூர்த்தி
சைவ சித்தாந்தத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

**முன்னுரை**

மார்கழி மாதம் நடைபெறும் முக்கிய விழா ஆருத்ரா தரிசனம். ஆருத்ரா தரிசனம் என்றாலே நடராசப் பெருமான் நினைவு வரும். திருவாதிரையில் நடராசரை வழிபட வேண்டும் என்று காரணாகமம் கூறுகின்றது. எவ்வாறு கார்த்திகை விளக்கீடு விழா சிறப்பாகக் கொண்டாடப் படும் இடம் திருவண்ணாமலை என்று கருதப்படுகின்றதோ, அது போல மார்கழித் திருவாதிரை நாள் சிறப்பாகக் கொண்டாடப்படும் இடம் சிதம்பரமாகும். இச்சிதம்பர நடராசர் மீது குமரகுருபரர் பாடிய நூல்கள் சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பர செய்யுட் கோவை என்ற இரண்டாகும். இவ்விரு நூல்களின் துணை கொண்டு குமரகுருபரர் கண்ட நடம் இக்கட்டுரையில் எடுத்துரைக்கப் படுகின்றது.

**தில்லைக் காட்சி**

குமரகுருபரர் சிவானுபவம் பெற்ற சைவ மெய்ஞ்ஞானி தத்துவப் பேரறிஞர். செந்தமிழ்ப் பற்று மிக்கவர். இவற்றோடு கற்பனை வளமிக்க கவிஞருமாவார். அவர் துறவு மேற்கொள்ளு முன், தன் ஞானாசிரியர் கட்டளைப்படி, காசித்தலயாத்திரை செல்வ தற்கு முன், சிலகாலம் சிதம்பரவாசம் செய்ய வருகின்றார். சிதம்பரத் திற்குரிய வேறு பெயர்கள் தில்லை புலியூர் புண்டரீகபுரம் முதலியன பூக்களில் சிறந்தது தாமரைப் பூ என்று கூறப்படும். சிதம்பரம் வந்த டைந்த குமரகுருபரர் அந்நகரைத் தாமரைமலராகக் கற்பனை செய் கின்றார். அங்குள்ள பொன்மன்றம் தாமரைப் பொகுட்டாகவும் (உட்கொட்டை) அதனைச் சுற்றியுள்ள மதில்களே இதழாகவும் சூழ்ந்துள்ள மேகக் கூட்டங்கள் வண்டுகளாகவும் காட்சியளிக் கின்றனவாம். (சித. மும். கோ. 3)

---

* உழவாரம் இதழில் வெளிவந்தது. நன்றி - உழவாரம்

## பொய்கைக் காட்சி

குமரகுருபரர் கோயிலை வந்தடைகின்றார். தாமரைப் பொய்கையைக் காண்கிறார் அவருக்கு அது திருமால் பள்ளி கொண்ட திருப்பாற்கடலாகத் தோன்றுகிறது (சித. மும். கோ. 29) தில்லையைப் பாடும்பொழுது திருமாலை நினைவிற் கொண்டது ஏன்? திருமால் நடராசப் பெருமானின் திருவடி காணத் தவங்கிடந்தார் என்பது புராண வரலாறு சைவநூற் புலமைமிக்க குமரகுருபரரின் அடிமனத்தில் அது பதிந்திருந்து அவ்வாறு தோன்றியிருக்கலாம். மேலும் தில்லையில் நடராசருக்கு முன் திருமால் கிடந்த கோலத்திலிருப்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

## பொன்னம்பலக் காட்சி

குமரகுருபரர்க்குப் பொன்னம்பலம் அழகிய தாமரைமலராகவும் அம்மன்றத்தில் ஆடும் இறைவனின் சிவந்த திருமேனி தேனாகவும், அம்மையின் கருவிழிகள் அத்தேனை உண்டு மகிழும் வண்டுகளாகவும் காட்சியளிக்கின்றன. (சித. செ. கோ. 14) "உமையாட்கென்றும் தேனவன் காண்" என்று திருநாவுக்கரசர் கூறியதும் (6 செ. 480) இங்கு நினைவு கூரத்தக்கது.

## நடராசர் திருஉருவக் காட்சி

குமரகுருபரர் நடராசப்பெருமானைத் தரிசிக்கின்றார். அவரது திருக்கோலம் ஓமென்னும் எழுத்தைப்போல் அமைந்துள்ளதைக் காண்கின்றார்.

> "ஓமெனு மெழுத்தின்வடி வாய்நட நவிற்றுபுலி
> யூரன்" (சித. செ. கோ. 52)

என்று கூறுகின்றார்.

இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களைச் செய்கின்றான். நடராசரின் திருவுருவம் இறைவன் செய்யும் ஐந்தொழிலை உணர்த்துவதே என உண்மை விளக்கம் (செ. 36) என்ற சாத்திர நூல் கூறுகின்றது. தத்துவப்பேரறிஞரான குமரகுருபரர் அதனை உணர்த்தும் விதத்தில் நடராசரின் திருவுருவத்தை அழகாக வர்ணிக்கின்றார்.

நடராசப் பெருமானின் உடுக்கை யேந்திய கரம் படைத்தல் தொழிலை உணர்த்துகின்றது.

"பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பி னுநில வளாகமும்
ஏனைப் புவனமு மெண்ணிங் குயிரும்
தானே வகுத்ததுன் றமருகக் கரமே"

(சித. மும். கோ. 2 வரி 1-4)

என்று கூறுகின்றார். தமருகக்கரம் என்றது உடுக்கை ஏந்திய கரத்தினைக் குறிக்கும்.

நடராசப் பெருமானின் ஒருகரம் அஞ்சேல் என்பது போல் அபயம் காட்டுகிறது. அந்த அபயகரம் காத்தல் தொழிலைக் குறிக்கின்றது.

"தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையுங் காப்பதுன் னமைத்த பொற் கரமே"

(சித. மு. கோ. 2, 5-6)

என்று குமரகுருபரர் அதனைப் போற்றுகின்றார்.

நெருப்பேந்திய கரம் அழித்தல் தொழிலை உணர்த்துவதாக,

"தோன்றுபு நின்றவத் தொல்லுல கடங்கலும்
மாற்றுவ தாரழல் வைத்ததோர் கரமே"

(சித, மு. கோ. 2, வரி 7-8)

என உரைக்கின்றார்.

நடராசப் பெருமான் தனது வலது பாதத்தை முயலகன் மீது ஊன்றியுள்ளார். அவ்வூன்றிய திருவடி மறைத்தல் தொழிலை உணர்த்துகின்றது.

"கூட்டிய வினைப்பய னெவற்றையு மறைத்துநின்
றாட்டுவ தாகுநின் னூன்றிய பதமே"

(சித. மு கோ. 2, வரி 9-10)

என்று குமரகுருபரர் கூறுகின்றார்.

நடராசப் பெருமான் தனது இடப்பாதத்தைத் தூக்கி ஆடுகின்றார். அத்தூக்கிய திருவடி அவர் செய்யும் அருளல் தொழிலை உணர்த்துகின்றது அத்திருவடியைக் குஞ்சிதபாதம் எனப் போற்றுகின்றார் குமரகுருபரர்:

"அடுத்தவின் னுயிர்கட் களவில் பேரின்பம்
கொடுப்பது முதல்வனின் குஞ்சித பதமே"

(சித. மு.கோ. 2, வரி 11-12)

எனக் கூறியருள்கின்றார் தூக்கிய திருவடி அருளைக் குறிப்பதனை லன்றோ திருநாவுக்கரசுப் பெருமானும் 'இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" (4 : 8 : 14) என்று பாடியருளினர்.

மேலும் நடராசரின் உருவில் குமரகுருபரர் பின்வரும் தத்துவத்தைக் காண்கின்றார். இடது திருவடியாகிய குஞ்சிதபாதத்தைக் காட்டி, அமைத்த திருக்கரம் ஒரு திருவடியைச் சுட்டுவது போலவும், அபயத் திருக்கரம் போதுமென்ற குறிப்பைக் காட்டுவது போலவும் அமைந்துள்ள. அது தன்னுடைய ஒரு காலை நோக்கிய மாத்திரத்தே உயிர்கள் பரகதியடைதல் கூடும் என்பதை உணர்த்துகின்றதாம்.

"கூடுங் கதியொருகாற் கும்பிட்டாற் போதுமெ
நாடு மவிநயத்தை நண்ணிற்றால்—ஓடியகட்
காதனர் காணவொரு கால்காட்டிக் கையமைத்து
நாதனர் செய்யு நடம்"

(சித. மும். கோ. 30

என்று குமரகுருபரர் கூறுகின்றார்.

## காலைத் தூக்கியாடக் காரணம்

பதஞ்சலி முனிவரும், வியாக்கிரபாத முனிவரும் காண இறைவன் நடனம் ஆடியதாகப் புராணவரலாறு. அதை மனதுட்கொண்ட குமரகுருபரர் இறைவன் ஒரு காலைத் தூக்கி ஆடுவதற்கு ஒரு நயமான காரணம் கூறுகின்றார். பதஞ்சலி முனிவர் பூமியைச் சுமக்கும் ஆதிசேடனையால் இறைவன் இரண்டு காலையும் ஊன்றினல் பாரம் பூமியை அழுத்தி அதைச் சுமக்கும் தன்னையும் தாக்கும் என்பதால் எச்சரிக்கையாக ஒருகாலைத்தூக்கி நின்றாடும்ஆட்டத்தைக் காண வரம் வேண்டினராம் (சித. மும். கோ. 4) காலை எதிலாவது இடித்துக் கொண்டாலோ அல்லது காலின் மீது கனமான பொருள் விழுந்துவிட்டாலோ புண் உண்டாவது இயல்பு. அந்த அனுபவ உண்மையை அடிப்படையாகக் கொண்டு குமரகுருபரர் இறைவன் காலைத்தூக்கி நிற்பதற்கு மற்றொரு காரணம் கற்பிக்கின்றார், திருமால் பிரமன் முதலானோர் இறைவன் காலில் விழுந்து வணங்க அவர்கள்

தலையிலுள்ள மணிமுடிகள் காலில் பட்டுப் புண்ணுவதால் இறைவன் ஒரு காலைத் தூக்கி நிற்கின்றாராம்.

(சி. செ. கோ. 63)

**இடக்காலைத் தூக்கியாடக் காரணம்**

ஒருசமயம் திருமாலும் பிரமரும் தாம் நாம் தலைவரெனத்தருக்குக் கொண்டு சண்டையிட்ட பொழுது சிவபெருமான் ஒரு சோதி வடிவில் அவர்கள் முன் தோன்றித் தன்னுடைய அடியையும் முடியையும் காண்பவர் எவரே அவரே தலைவர் என்று கூறுகின்றார். பிரமன் அன்ன வடிவம் எடுத்து மேலே பறந்து காண முயல, திருமால் பன்றி உருக்கொண்டு கீழே அகழ்த்து அடி காண முயல்கின்றார். இருவரும் பல்லாண்டுகள் முயன்றும் அடியையும் முடியையும் காணாது தோல்வியுற்றதாகப் புராண வரலாறு. அதனை மனத்துட் கொண்ட குமரகுருபரர் சிவபெருமான் இடக்காலைத் தூக்கி ஆடுகின்றமைக்குக் காரணம் கூறுவது நயமிக்கது. தில்லையில் தன்முன்னுள்ள திருமால் பார்த்தாலும் சிவனுடைய பாதத்தைக் கண்டுவிட்டேன் எனப் பெருமைப்பட முடியாது என்பதற்காம். ஏனெனில் அப்பாதம் உமையவளுக்கு உரியதாம். உமையவளே திருமாலின் தங்கையாவாள். எனவே அதில் தவறில்லையாம் (சித. மும். கோ. 12)

**திருவடி சிவப்பிற்குக் காரணம்:**

நடராசப் பெருமானின் திருவடி தரிசனம் பெற்ற குமரகுருபரருக்கு அத்திருவடிகள் சிவந்திருப்பது கண்ணில் படுகின்றது. அவ்வாறு திருவடிகள் சிவந்திருப்பதற்கான காரணத்தைக் கற்பனை செய்கின்றார் ஆடுவதால் சிவந்திருக்குமோ? அப்படியானல் ஊன்றிய திருவடி மட்டுமே சிவந்திருக்க வேண்டும். தூக்கின திருவடியும் சிவக்கக் காரணமில்லையே எனச் சிந்திக்கின்றார். உமையம்மை தம் கைகளால் பிடிப்பதால் சிவந்திருக்குமோ என எண்ணுகின்றார். அம்மையின் கைகள் தளிர் போன்று மென்மையுடையனவாதலால் சிவக்கச் செய்யா என உணர்கின்றார். இறுதியில், தேவர்கள் தம் தலைவனென்று சிவபெருமானின் திருவடிகளைத் தம் முடிகளில் சூடுவதால் அத்திருவடிகள் சிவந்துள்ளன போலும் என்று முடிவு செய்கின்றார்

( சித. மும். கோ. 31 )

**ஆடல் பற்றிய வருணனை :**

ஐம்புலன்களாகிய ஐந்து பாம்புகளையும் ஆட்டுவிக்கும் பாம்பாட்டிச் சித்தராகிய இறைவன் ஒரு பாம்பு ( பதஞ்சலி ) ஆட்டு

விக்க ஆடுகின்றனும் (சித. மும். கோ. 6) அவன் ஆடும்போது வண்டுகள் பாடுகின்றன மகுடங்கள் ஆடுகின்றன. பிறைத்துண்டும் ஆடுகின்றது. அணிந்துள்ள புலித்தோலாடை ஆடுகின்றது அம் மட்டோ அவன் ஆட்டத்தால் அண்டங்களெல்லாம் ஆட, அதனல் இவ்வுலகமும் நிலைகுலைந்து ஆடிற்றும் (சித. செ. கோ. 37).

மேலும் மலைகளை இறைவனுடைய புயமாகவும், வானத்தை அவனது திருமேனியாகவும், அண்ட கூடத்தைத் திருமுடியாகவும், மேருமலையை அவன் கையிலுள்ள வில்லாகவும் கற்பனை செய்து இத்தகையவன் நின்றாட இத்தில்லைச் சிற்றம்பலம் போதுமோ என வியக்கின்றார். (சித. மும். கோ. 9)

இங்கு, காரைக்காலம்மையார் இறைவனிடம், "இறைவரே உம் முடைய திருவடியைத் தூக்கி வைப்பீரேயானல் கீழேழ் உலகங் களும் நிலைமாறிவிடும் சிரசை அசைத்து நர்த்தனம் செய்யத் தூக்குவீரேயானல் பெரிய அண்ட முகடுகளும் பெயர்ந்துவிடும். கடகத்தை அணிந்த கையைத் திருப்பித் தூக்குவீரேயானல் பெருமை பொருந்திய அட்டதிசைகளும் நிலைகுலைந்து போய்விடும். உன்னுடைய ஊர்த்துவ தாண்டவத்தை உலகமாகிய அரங்கு தாங்காது. இதனை நீர் அறிந்து அளவோடு ஆடுக" என்று கூறுவது நினைவுகூரத்தக்கது. திருமுறைகளில் நிரம்பப்பயிற்சி பெற்ற குமரகுருபரர் அம்மையாரின் இக்கூற்றை நினைவில்கொண் டே, நடராசப் பெருமானின் ஆடலுக்கு இச்சிற்றம்பலம் பற்றுமோ என ஐயுற்றிருக்க வேண்டும்.

ஆன்மாக்களின் பாலுள்ள பேரருளாலே நடராசப்பெருமான் ஐந்தொழிலும் இயலும்படி ஓய்வின்றி நடனமாடுவதாகக் கூறு கின்றார் (சித. மும். கோ. 11 வரி 18 — 21)

இவ்வாறு ஓய்வின்றி நடனமாடுவதால் அவருடைய பாதம் சலிக்காதோ என ஐயுறுகின்றார், சேர்வார்தாமே தானகச் செய்யும் நடராசப் பெருமானைப் பதஞ்சலியார் (பதஞ்சலி என்ற முனிவர்), தம்மைப் போலப் பதஞ்சலியா ராக்கினர் (ஆடப் பதம் சலி யார் ஆக்கினர்) என்று தாமே விடையையும் நயத்துடன் கூறித் தெளிகின்றார்.

(சித. மும். கோ. 21)

**அம்பிகை காண ஆடிய நடம் :**

நடராசப் பெருமான் சிவகாமியம்மை காணத் திருநடனம புரிகின்ருர். அம்பிகை காண இறைவன் ஆடுவதை "வரை மகள் தான் காணும்படியே கருணையுருக் கொண்டாடல் என்று உண்மை விளக்கம் (செ. 38) கூறுகின்றது. "மணிமன்றுள் ஆடல் காணும் அன்னை" என்று சிவகாமியம்மையைத் துதிக்கின்ருர் உமாபதி சிவம் (சிவப்பிரகாசம், மங்கல வாழ்த்து 2) அம்மை காண ஐயன் நடனம் ஆடும் காரணத்தைக் குமரகுருபரர் நயத்துடன் இன்பம் பயக்க விளக்குகிருர் குழந்தையின்குடல் மருந்தைச் சீரணிக்கும் சத்தியற்ற தென்று தான்உண்டு அதன்பயனைப் பாலின் வழியே அக்குழந்தை பெறும்படி செய்யும் தாயைப்போல, அம்பிகை நடராச மூர்த்தியின் திருநடனத்தைத் தான் தரிசித்து, அதன் பயனை உயிர்கள் நுகரவைப்பள் என்று கூறுகின்ருர் (சித. மும். கோ. 2 வரி 14 - 21)

**நடனத்தைத் தரிசிப்பதன் பயன் :**

நடனத்தைத் தரிசிப்போர் பிறவா நன்னெறி அடைவர் (சித. மும். கோ. 5 வரி 9 - 10). "சிதம்பரம் தரிசிக்க முக்தி" என்பது பழமொழி அதனை நினைவிற்கொண்டு குமரகுருபரர் பின்வருமாறு கூறுகின்ருர். தவத்தையுடைய தொண்டர்கள் ஓதுதல் முதலிய பல பெருமுயற்சிகளைச் செய்து வீடுபெற்றனர்.அடியனே அம்பல தரிசன மாத்திரத்தில் பிறவாநெறி பெற்றேன் என்று கூறுகின்ருர் (சித. மும். கோ 5, வரி - 10, சித. செ. கோ. 8). பிறவாநெறி பெறுவது உறுதியாதலால் பெற்றேன் என இறந்த காலத்தில் கூறினர். ஆனலும் திடீரென்று ஒரு ஐயம். எனவே இறைவனிடம் பின்வருமாறு நயத்துடன் வேண்டுகின்ருர். அடியேன் நின் திரு நடனக் கோலத்தைத் தரிசித்த பிறகும் பல பிறவிகளைப் பெறுனுவே கில் அது குறித்து அஞ்சேன். ஆனல் தேவர்கள், ஒருமுறை திருநடன தரிசனம்செய்த மாத்திரத்தில் முக்தியுண்டென்று வேதம் கூறுவது உண்மை இல்லையோ ? இவன் அது பெறவில்லையே என ஐயுற்று அஞ்சுவர். அவர்கள் அஞ்சுவதைக் கருதியேனும் எனக்கு நீ அருள் செய்வாயாக என வேண்டுகிருர் (சித மும். கோ. 20, வரி 22 - 28)

ஆணவம், கன்மம், மாயை என்ற அழுக்குநிறைந்த குடிசையாகிய உடம்பில் தருக்குற்றிருப்பதை விட்டு நீங்கி என்றும் அழியாது விளங்கும் முக்தி பெறுதற் பொருட்டுக் குஞ்சிதபாதத்தைச் சரண மென்று இறைஞ்சுவோம் (சித. செ. கோ. 68) என்றும்.

" கண்ணுதற் கடவுள்
புண்ணியப் பொதுவி லாடும்
பூங்கழ லிறைஞ்சுதும்
விண்மிசைப் போகிய வீடுபெறற் பொருட்டே "

( சித. மும். கோ. 43 )என்றும்

நம்மையும் உளப்படுத்தி நடராச தரிசனம் செய்ய அழைக்கின்றார்.

மற்றோரிடத்தில் குமரகுருபரர் நடராசப் பெருமானைக் கும்பிடுவது வீடுபேற்றைவிட இன்பந்தருவது என்று கூறுகின்றார். " கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினார் " ( பெரியபுராணம், திருக்கூட்டச்சிறப்பு, 8 ) என்ற சேக்கிழார் வாக்கைக் கருத்திற்கொண்டு, மெய்ப்பொருள் துணியும் ஞானியர் இறைவனின் குஞ்சிதபாதத்தைக் கும்பிடுதலையே வீடு பேற்றினும் சிறந்ததாகக் கொள்வர் ( சித. செ. கோ. 50 ) என்று குமரகுருபரர் கூறுகின்றார்.

" யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் " என்பதற்கிணங்க குமரகுருபரர் தாம் அம்பலக் கூத்தன் — அற்புதக் கூத்தனின் திருநடனத்தைக் கண்டு இன்புற்றதோடு அமையாது நம் அனைவரையும் காணுமாறு அழைக்கின்றார் ( சித. செ. கோ. 37 )

மார்கழி பிறக்கின்றது. நாம் அதிகாலையில் எழுந்து நீராடி தூய்மையுடன் திருக்கோயிலுக்குச் சென்று, நடராசப்பெருமானை நினைத்து, திருப்பள்ளியெழுச்சியும், திருவெம்பாவையும் பக்தியுடன் ஓதி நாளும் வழிபடுவோமாக !)

**சுருக்க குறியீட்டு விளக்கம்.**

சித. மும். கோ. — சிதம்பர மும்மணிக்கோவை.
சித. செ. கோ. — சிதம்பர செய்யுட்கோவை.

❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋

சென்ற இதழில் " முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ் "
என்னும் ஆய்வுக்கட்டுரையை எழுதியவர்
**செல்வி. சு. அகிலா** என்பவராவார்.

# ஸ்ரீ குமரகுருபரர் பிரபந்தங்களில் மதுரைக் கலம்பகம்

ப. முத்து. பி.ஏ.

**முன்னுரை:**

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய சிற்றிலக்கிய வகைகளுள் கலம்பகமும் ஒன்று. அடிகள் இயற்றிய கலம்பக நூல்கள் மூன்று. அவை, (1) கயிலைக் கலம்பகம் (2) மதுரைக் கலம்பகம் (3) காசிக் கலம்பகம். இவற்றில் இரண்டாவது அருளியது மதுரைக்கலம்பகமே. சிற்றிலக்கிய வகையில் ஒன்றான கலம்பகம் மூலம் எம்பெருமானின் சிறப்புகள் அனைத்தும் சிறப்பாகத் தீந்தமிழில் பாடியுள்ளார். அவரின் வழிநின்று இறைவனின் பெருமையைக் காண்போம்.

**கலம்பகம் - அறிமுகம்:**

தொண்ணூற்றாறு என்னும் பட்டியலில் அடக்கிப் பாட்டியலார் கூறும் இலக்கிய வகைகளில் கலம்பகமும் ஒன்று. பல்வேறு சுவைகள் நிரம்பிப் பல்வேறு உறுப்புக்களும் பல்வேறு யாப்பு வகைகளும் அமைய விளங்குவது இக்கலம்பக இலக்கியம். இனி இதன் பெயர்க் காரணத்தைக் காண்போம். கலம்பகம் என்பது வடசொல் என்பர். கலம் + பகம் எனப் பிரித்துக் கலம் என்பது பன்னிரண்டு, பகம் என்பது அதில் பாதி ஆறு எனப் பொருள் கொண்டு பதினெட்டு உறுப்புக்கள் உடையது கலம்பகம் என்பர். அவ்வுறுப்புக்களாவன

1) புயவகுப்பு 2) மதங்கு 3) அம்மானை 4) காலம் 5) சம்பிரதம் 6) கார் 7) தவம் 8) குறம் 9) மறம் 10) பாண் 11) களி 12) சித்து 13) இரங்கல 14) கைக்கிளை 15) தூது 16) வண்டு 17) தழை 18) ஊசல் என்பனவாம்.

கலப்பு + அகம் எனப் பிரித்துப் பல பாக்களும், துறைகளும் தொடர்பின்றிக் கலத்தலைத் தன்னகத்தே கொண்டது கலம்பகம் என்பர் ஒரு சாரார். கலப்பு என்ற வன்றொடர்க் குற்றியலுகரம் கலம்பு என மெலிந்தது என்பர். இவர் தம் கருத்து கலம்பகம் என்பது தமிழ்ச் சொல் என்பதாகும். பதினெட்டு உறுப்புக் களுடையது கலம்பகமாயின் இதற்கு மேலும் உறுப்புக்கள் அமையப்

பாடுதல் இலக்கணத்திற்கு மாறுபாடாம். கலம்பக நூல்களில் பிச்சியார், கொற்றியார், இடைச்சியார், வலைச்சியார் ஆகிய உறுப்புக்கள் இருத்தல் காணலாம். அவை பிற்கால வழக்கில் வந்தன எனினும் இலக்கண வரம்பு பெற்ற நூலுக்கு அவ்விலக்கணத்தின் மாறுபட்ட முறை நுழைதல் - நுழைத்தல் கூடாது.

கலம்பகம் என்பது பற்றிக் கரு. இராமநாதன் செட்டியார் தரும் விளக்கம் ஈண்டு நினைவு கூரத்தக்கது. கலம்பகம் என்பது பலவகை உறுப்பும், பொருளும், பாட்டும் கலந்து பாடப்படுகிறது.

"பல்பூமியடைந்த படலைக்கண்ணி" என்ற பெரும்பாணாற்றுப்படைத்தொடருக்கு, "பலபூக்கள் நெருங்கிய கலம்பகமாகிய மாலை" என்று நச்சினார்க்கினியர் விளக்கம் தருவதாலும், "களி வண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த அலங்கலந் தொடையல்" எனவரும் தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருப்பள்ளியெழுச்சியின் வரியாலும் கலவை என்னும் பொருளில் கலம்பகம் என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது. இதனை இக்காலத்தார் கதம்பம் என்பர்

முடிவாக "பல்வேறு வகைப்பட்ட நிறமும், வடிவும், மணமுடைய மலர்களால் தொடுக்கப்பட்ட பூமாலை கலம்பகம் என்னும் பெயர் பெற்றாற் போல், பலவகையான ஓசை நயமுடைய பாக்களும் இனங்களும் உறுப்புக்களும் பயின்று அகமும், புறமும், அகப்புறமுமாகிய திணைகள் விரவி உவகை, பெருமிதம் முதலிய சுவ்வகைளயுடையதாய் அமைக்கப்படும் பாமாலை கலம்பகம் எனனும் பெயர் பெற்றது எனலாம்

**பா வகை:**

கலம்பக யாப்பு தனித்த ஆய்வுக்கு உரிய பொருண்மைச் சிறப்புடையது. கலம்பக இலக்கியத்தில் ஒருபோகு, வெண்பா, கலித்துறை எனவரும் மூன்று பாவகைளும் கலம்பகத்தின் தொடக்கத்திலேயே பயின்று வர வேண்டும் என்பது பாட்டியல் விதி.

> சொல்லிய கலம்பகம் சொல்லில் ஒருபோகு
> முதற்கண் வெண்பாக் கலித்துறை.........

எனப் பன்னிரு பாட்டியலும்,

> "கூறும் ஒருபோகு வெண்பாக் கலித்துறைகள்
> மாறில் முதல் உறுப்பாம்........."

என வெண்பாப் பாட்டியலும், இங்ஙனமே பிறபாட்டியல் நூல்களும் கூறுகின்றன. மேற் கூறிய பாவகைகளேயன்றி, வெண்பா,

வெண்டுறை, ஆசிரியம், ஆசிரிய விருத்தம், கலிப்பா, கலித்துறை, கலித்தாழிசை, கலிவிருத்தம், வஞ்சிப்பா, வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம் ஆகிய பிற பாவகைகளும் வரும் என்பது பாட்டியல் நூல்களால் அறியலாம்".

கலம்பக உறுப்புக்களில் இறைப்பெருமை:

இறைவன் திருவருளைப் பெற விரும்பும் தமிழன்பர்கள், அவ் விறைவனைத் தலைவனாகவும் தங்களைத் தலைவியாகவும் உருவகித்துக் கொண்டு பாமாலை தொடுத்து மகிழத் தொடங்கினர்கள். அத் துறையில் முகிழ்த்த ஒன்றே 'கலம்பகம்' ஆயிற்று. "மதுரைக் கலம்பகம் என்பது மதுரைச் சோமசுந்தரக் கடவுளைக் காமுற்ற கனிப்பருந் தெய்வக் காதல் தேங்கிய உள்ளத்தடத்தில் முகிழ்ந்த தாகும். மதுரைக் கலம்பகம் விநாயகர் காப்பு உள்பட 103 பாடல்களைக் கொண்டது.

மதுரைக் கலம்பகத்தில் உள்ள கலம்பக உறுப்புகளின் வாயி லாக இறைவனின் பெருமைகளில் ஒருசில காண்போம்.

புயவகுப்பு:

கலம்பகத் தலைவருடைய சிவனுடைய தோள்களின் சிறப்பைக் கூறுவது பாட்டுடைத் தலைவராகிய சிவபெருமானது தோள்களின் பெருமையைக் கூறுமிடத்து,

"உருமிடி யெனவெடி படவெதிர் கறுவி
நடந்தொரு பாணன் ஒதுங்கத் திரிந்தன
உருகிய மனமொடு தழுவினர் கிழவி
கருந்துணி மேலிடு வெண்பிட் டுகந்தன
உறுதியொடு அவள்மனை புகும்வகை கடிது
சுமந்தொரு கூடைம ணுந்திச் சொரிந்தன
உருவிய சுரிகையொடு எதிர்வரு செழியர்
பிரம்படி காண நடுங்கிக் குலைந்தன"

என்ற பாடலின்கண் விறகு சுமந்து திரிந்தும், மண்சுமந்தும், பிரம் படிபட்டுக் குலைந்தும், மதுரையில் சிவபெருமான் நடத்திய திரு விளையாடல்கள் இடம்பெறுகின்றன.

பாண்:

பரத்தையரிடம் சென்று வந்த தலைமகனைக் கண்டு தலைவி ஊடல் கொள்ள, அவள் ஊடலைத் தீர்த்து வரப் பாணன் ஒருவனைத்

தலைவன் அவளிடம் அனுப்ப அப்பாணனைத் தலைவி வெகுண்டு கூறுவதாகச் செய்யுள் செய்வது இதன் இலக்கணம்.

தலைவன் வீட்டில் உள்ளானா என்று தேடிவந்த பாணனிடம் பரத்தையர் இல்லத்தில் தலைவனை வைத்து இங்கே தேடுகின்றாய் இது பொன்னை ஆற்றிலிட்டுக் குளத்தில் தேடிய முதுகுன்றையோ மதுரையோ நீ வாழுமிடம் என்கிறாள் தலைவி. இது அகப்பொருள் முறையில் இறைவனைப் பற்றிய குறிப்பும் அமைந்து உள்ளது.

"கொங்குரை யாற்றி விட்டுக் குளத்திலிற் றேடநீடு
மங்குறேய் முதுகுன்றையர் மதுரையோ மதியில் பாணு
எங்கையர் மனைக்கண் வைத்தாங்கு எம்மிடைத் தேர்திமற்றும்
மங்கையர் மனம்போலன்றே மகிழ்நர்தம் வாழ்க்கை தானே"

என்பதால் சோழர்களிற் சிலர் கொங்கு நாட்டு அரசர்களை வென்று அந்நாட்டிலிருந்து பொன் கொணர்ந்தாரென்ற பழைய வரலாறும் மேலும் சுந்தரமூர்த்தி நாயனார் பெருமான் ஒருமுறை சிவாஞ்ஞை யால், மணி முத்தாற்றில் இட்ட பொன்னைத் திருவாரூர் குளத்தி னில் எடுத்தனர் எனும் செய்தியும் காணமுடிகிறது.

"நீற்றழகர் யாட்டு வந்து திருவிளையாட்டினில் நின்று
மாற்றுரு செம்பொன் குளத்து வருவியாதொழிந்தருள
ஆற்றினி விட்டுக்குளத்தில் தேடுவீர்! அருவிதுவோ
சாற்றும் எனப்பொ ஞெடியார் மொழிந்தருள

எனச் சேக்கிழார் பெருமான் கூறுவதாலும் இதனை அறியலாம்.

**கைக்கிளை:**

இது ஒருதலைக் காமம் தலைவன் தலைவிபால் இசைவு பெறாத நிலையில் காதல் கொள்வது.

இறைவனுடைய அன்பு கிடைக்கப் பெறாத நிலையில் அவை கைக்கிளைத் தன்மையுடையனவாகவே கருதத்தகும். கங்கைக்குச் சடையும் உமைக்குப் பாதியுடம்பும் அளித்துத் தலைவிக்கு மட்டும் தோளினைத் தராமல் இருப்பது நடுநிலையாகாது என்று வருந்து வதாக உள்ளது.

"வாணிலாப் பரப்பு மகுடகோ டீரம்
மறிபுனற் கங்கை நங்கைக்கும்
...வையமீன் றளித்த மரகதக்கொடிக்கும் உன்
...வாழயா கழும்வழங் கினையால்

பூணுலாங் களபப் புணர்முலை யிவட்கு உன்
பொற்புயம் வழங்கலை எமர்போற்
பொதுவினிலருக்கு நடுவின்மை யிடையே
புகுந்தவா றென்கொலோ புகலாய்"

என்று கூறுவதால் தலைவியின் ஒருதலைக் காமம் புலப்படும்.

**மடக்கு:**

ஒரே சொல் அல்லது தொடர் மீண்டும் வந்து வேறு பொருள் தந்து நிற்கும் முறையில் மடக்கு என்னும் சொல்லணி அமையும். இவ்வகையில் அடிகள் மூன்று பாடல்களைப் பாடியுள்ளார் அதிலொன்று,

"தொடுத் தணிந்ததும் அம்புதர் அங்கமே
சுமந்திருந்ததும் அம்புதரங்கமே
எடுத்து நின்றதும் மாயவர் ஆகமே
எயிறிருத்ததும்மாய வராகமே
அடுப்ப தந்தணர் பன்னக ராசியே
அணிவ துஞ்சில பன்னக ராசியே
கொடுப்பது ஐயர் கடம் பவனத்தையே
கொள்வது ஐயர் கடம்ப வனத்தையே"

எனும் பாடலில், இறைவன் அணிந்திருப்பது அம்புதர் அங்கம் (தேவர்களின் எலும்பு) சுமந்திருப்பதும் அம்புதரங்கம் (அலையையுடைய நீர்) எடுத்து நின்றதும் மாயவர் ஆகம் (திருமாலின் உடம்பு) எயிறு இருத்ததும் மாயவராகம் (வராகம் மாயும்படி) அடுப்பதும் அந்தணர் பன்னகராசி; அணிவதும் பன்னகராசி (பாம்புக் கூட்டம்) அடியவர்க்குக் கொடுப்பது தேவர்கள் தம் உலகம், இடமாகக் கொண்டிருப்பது ஐயர் கடம்பவனமாகிய மதுரை என்று இவ்வாறு சொல்லணிச் சிறப்புடைய மடக்குப் பாடல்கள் அடிகளின் புலமைச் சிறப்பை உணர்த்துகின்றன.

**மதுரையின் மாண்பு:**

தென்தமிழ் நாட்டுத் திருத்திர் மதுரை தமிழுக்கும் தமிழ் நாகரிகத்திற்கும் ஒரு வளர்ப்புப் பண்ணையாகத் திகழ்வது. பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேலாகப் பாண்டிய நாட்டின் தலைநகராக விளங்கிய தொன்னகர். இது நான்மாடக்கூடல் என்றும் திருவாலவாய் என்னும் சிறப்புப் பெயர்கள் பெற்றது. தமிழ் வளர்க்கும் பணியில் முச்சங்கங்களுக்கும் உறைவிடமாகத் திகழ்ந்தது.

"சீர்கொண்ட கூடற் சிவராச தானிபுரத்
தேர்கொண்ட சங்கத்திருந்தோரும்"

எனத் தமிழ் வீடுதூதும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே தமிழ்ச்சங்கத்தின் தலைமைப்புலவனாக வீற்றிருந்த சிறப்பும் தெய்வத் தன்மையும் பெற்று விளங்கும் நகர் என்பதனையும் அறியலாம். மேலும்,

"ஈவாரைக் கொண்டாடி ஏற்பாரைப் பார்த்துஉவக்கும்
சேய்மாடக்கூடலும்

எனவரும் பரிபாடல்டிகளாலும் மதுரையின் மாண்பு தெரியும்.

தலசம்பந்தமாக அமைந்த சிற்றிலக்கியங்களில் அவ்வத்தல வரலாறுகளை இணைத்துப் பாடுவது புலவர் இயல்பு. மதுரைக் கலம்பகத்தில் மதுரைத்தலத்து சோமசுந்தரக் கடவுளின் பெருமைகளை நூலெங்கும் பாடியுள்ளார் குமரகுருபரர்.

கலம்பக உறுப்புக்களில் ஒன்றுன் ஊர் என்னும் தலைப்பில் பாட்டுடைத் தலைவனது ஊரைச் சிறப்பித்துக் கூறும் முறையில் இது பாடப்பெறும். கல்யாண சுந்தரர் மேவும் வண்பதி, உயர்ந்து நுடங்கும் ஒண்கொடி பிறைநிலவின் கூன் நிமிர்ந்திடுமாறு விளங்கும் கூடலம்பதியாகும் என்பதை,

"தான வெங்களி றேடும்இந்திரன் சாபமும்தொலையா
மேனி தந்தகல்யாண் சுந்தரர் மேவும் வண்பதியாம்
வானிமிர்ந்திட ஆடுமொண்கொடி வாலசந்திரனும்
கூன் நிமிர்ந்திடவே நிமிர்ந்திடு கூடலம்பதியே"

என்கிருர். மேலும்,

"புடைகொள் கருங்கலை புனைபவள் வெண்கலை
புனையுமொர் பெண்கொடியா
வடகலை தென்கலை பலகலையும் பொதி
மதுரைவளம் பதியே"

என்றும் மதுரையின் மாண்பு கூறப்படுகின்றது மதுரைக்கு வேறு பெயரான திருவாலவாய் என்பது அங்கு குடிகொண்டிருக்கும் சோமசுந்தரரின் பெயராலேயே அமைக்கப்படும் சிறப்புமிக்கது.

மதுரைக்கலம்பகத்தில் சோமசுந்தரப் பெருமான் மதுரையில் நிகழ்த்திய திருவிளையாடல்களை அகத்துறைச் செய்திகளோடு கலந்து அமைத்துத் தந்துள்ளார். பொதுவாக அகத்துறை மரபில் 41 பாடல்கள் இடம் பெறுகின்றன. இவை மதுரைத் தலவரலாறு களையும் இறைவனைப் பற்றிய குறிப்புகளையும் இணைத்துப் பாடும் முறையில் விளங்குகின்றன. அவற்றில் சில காண்போம்.

**தழை:**

தலைவன் தோழிமூலம் தலைவியைத் தழை ஏற்கும்படி கூறுவது. தழையென்பது மலர்களையும் இலைகளையும் சேர்த்துக்கட்டிச் செய்யப் பட்ட உடை என்பர். தலைவன் விருப்புடன் அளித்துள்ள தழை உடை தலைவியின் மார்பாகிய யானைக்கு ஏற்றது என்றும் மதுரேசப் பாண்டியன் கல்யானைக்கு இட்ட கரும்பினும் சிறந்தது என்பதை,

''பல்லா ருயிர்க்கும் உயிராம் மதுரேசப் பாண்டியன்முன்
கல்லானைக் கிட்ட கரும்பன்று காணின்''

என்னும் அடிகளால் அபிஷேக பாண்டியன் கல்லானைக்குக் கரும் பருந்திய திருவிளையாடற் புராண நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றார்

சோமசுந்தரக் கடவுள் மண்சுமந்து திருமேனியில் அடிப்பட்ட காலத்தில் எல்லா உயிரும் அவ்வடியைப் பெற்றதென்பதை நினைந்த தலைவி, ''அந்தக் காலத்தில் நாமும் அடிபட்டிருப்போம் இப்போது நம் உடல் காமநோயால் துன்புகின்றதே; முன்போல இப்போதும் அவன் திருமேனிக்குத் தீங்குண்டாயிற்றோ என்று,

''அம்மாநம் மேலன்று பட்டஅருட்கூடற்
பெம்மான்மேற் பட்டபிரம்படியே — இம்முறையும்
எம்மேனி காமநோய்க்கு ஈடழிந்த வாஅடிகள்
செம்மேனிக்கு உண்டாங்கொல் தீங்கு''

என்று கூறுவதன் வாயிலாக அறியலாம். இதனையே,

''விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலிக்கொண்ட கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்''

என்று திருவாசகமும் கூறும் இது மதுரையில் பிட்டுக்காக மண் சுமந்து பாண்டிய மன்னனால் பிரம்படி பட்டபோது அவ்வடியானது எல்லா உயிர்களின் மீதும் பட்டது எனும் திருவிளையாடற் புராணச் செய்தியும் கூறுகிறது.

மடலேறப் புகுந்த தலைவன் பனைமாலைக் குதிரையாக்கி ஊர்ந்து வரும் தன் செயலுக்கு மதுரேசர் நரியைப் பரியாக்கிய திருவிளையாடலை உவமையாக்குகின்றான்.

"நன்னீ ரமுதக் கடலாகியுளசர்
நரியைப் பரியாக் கிடைத்தினரால்"

என்ற வரிகள் இறைவன் மாணிக்கவாசகப் பெருமான் பொருட்டு நிகழ்த்திய திருவிளையாடல் நிகழ்ச்சியை நினைவுப்படுத்துகிறது. மாணிக்கவாசகருக்கு அருள் செய்ய வேண்டிக் காட்டில் திரியும் நரிகளைக் குதிரைகளாக்கித் தேவகணங்களைப் பாகர்களாகவும், தானே குதிரைச் சேவகனாகவும் மதுரை மாநகரம் வந்தான் என்பதை.

"அரியொடு பிரமற் களவறி யொண்ணான்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்"

என்ற மாணிக்கவாசகப் பெருமானின் மணிமொழியால் அறியலாம்.

தலைவி காமநோயால் உடல்வெம்பிக் கிடக்கையில் தோழி யொருத்தி அவள் மேல் திருநீற்றைத் தடவுகின்றாள்; அது கண்ட தலைவி, "அன்று ஞானசம்பந்தப் பெருமான் கூன்பாண்டியருக்குத் திருநீற்றைத் தடவியது போல் என்மேல் நீ தடவுகின்றாயே அதனால் அன்று அவன் சுரநோயும் கூனும் நீங்கப் பெற்றான். இப்போது என் காம வெப்பமும் தீரவில்லை; மன்மதன் வளைத்த வில்லின் கூனும் நிமிரவில்லை. இது மதுரையன்று போலும்" என,

"ஆவா என்னே தென்னவர் கோற்கன் றலிசாந்தம்
நீவா நின்றாய் நின்றில காமா னலமென்னே
கோவம் வில்லி தொடு தனுவும் கூனிமிராதால்
மூவா முதலார் மதுரை ஈதன்றே மொழிவாயே"

இவ்வாறு இரங்குகின்றாள். இதனை,

"தென்னவன் வெப்புத் தீர்ந்து செழுமணிக் கோயில் நீங்கிப்
பின்னுற அணைந்த போது பிள்ளையார் பெருகுஞ்செல்வம்
மன்னிய மதுரை மூதூர் மறுகில் வந்தருளக் கண்டு
துன்னிய மாதர் மைந்தர் தொழுதுவே றணைய சென்றார்

என்னும் பெரிய புராண அடிகளும் இதனைத் தெளிவுப்படுத்தும் சமண சமயத்தில் நின்ற கூன்பாண்டியனை எம்பெருமான் அருளால் வெப்பு நோய் தந்து அவனது வெப்பையும் கூனையும் நிமிர்த்தி நின்றசீர் நெடுமாறனாக ஆக்கிய ஞானசம்பந்தப் பெருமானின் செயலும் இதில் இடம்பெறுகிறது.

(தொடரும்)

# ஞானமிர்தம்

தொடர்ச்சி

இ - ள் என்சுவாமியே பரமசிவனுடனே கூடியிருக்கின்ற சத்தி சங்கற்பத்தாலே சுத்தமாயையினுடைய கலக்கத்திலே யுண்டானது பிரபஞ்சம் என்று மிகவும் அருளிச் செய்தாய்; அந்தச் சுத்த மாயைதான் அசேதனம் ஆதலால் குற்றமற யாதும் செய்யமாட்டாது. அந்தச் செயல் நின்மலனான பரமசிவனாலே செய்யப்படும் என்னில் அவனுக்கு விகாரம் கூடும். அவனுக்கு விகாரம் உண்டாகவே குற்றத்தை விடாத அவ்விகாரத்தை ஒழிய விடாது எய்தும் தூடணத்துக்கு முடிவுஎன் என்பாயாகில் சொல்லுவோம் கேட்பாயாக.

மிகுந்து தொழிற்படும் சிருட்டிவினை இருவகைப்படும். அவை சங்கற்பசிருட்டியென்றும் கரண சிருட்டியென்றுமாம் விரிந்த கடங்களை குயவன்றான் விளக்கம் உண்டாகச் சங்கற்பத்தினாலே முதன்மையறச் செய்ய மாட்டுவானல்லன். பரமசிவன் தனது திவ்ய சங்கற்ப மாத்திரையானே விந்துவை மயக்கமும் வருத்தமும் இல்லையாய்ச் சலக்காநிற்பன் ஒருகாலும் விகாரியாகான். பிள்ளாய் பரமசிவன் சங்கற்பத்தாலே செய்தற்குக் காரணம் கேளாய்.

கரணத்தினாற் செய்தற்கு இயன்ற மந்திரரூபம் முதலாகவுள்ள தேகம் யாதும் எடுத்துக் கொள்ளானாகலானும் சுத்தமாக நல்ல இயல்பையுடைத்தாகிய நிருமலன் ஆகலானும் காண். சரீரத்தைப் பொருந்தியோர் அஃது ஏகதேசப்பட்டமையாலே காரணங்களாலே ஒன்றைச் செய்வதன்றி யாவற்றையும் குற்றமறச் செய்யமாட்டுவாரல்லர். சரீரமில்லாதோர் அனைத்தையும் செய்தற்கு வல்லாரல்லர் என்று சொல்லற்க. ஆகவே சரீரமானது பிரபஞ்சம் அடங்கலும் செய்வதற்கு விக்கினமாயிருப்பது என்பதற்கு ஐயமில்லை. அத்தேகம் இல்லையாயின் எல்லாவற்றையும் செய்தற்குச் சிறிதும் தாழ்வுபடாது அஃது எவ்வண்ணம் என்னில் நிச்சயமாக தனது தேகத்தைக் கரணமாகக் கொண்டு ஒவ்வொன்றைச் செய்கிற சைதன்னியன் அரூபியாகிய ஆன்மா அல்லனோ? பரமசிவன் இப்படியால் அரூபியாயிருந்தே பிரபஞ்சம் அனைத்தையும் செய்யாநிற்பன். பிள்ளாய்! நீ இன்னமும் கேட்பாயாக.

சரீரத்தோடு கூடியிருப்போர்க்கு அல்லது செயல் கூடாது என்னில் அச்சரீரம் காரியமாயிருத்தலால் அக்காரியந்தான் செய்வோன் ஒருவனையின்றி வருவதில்லையாதலால் தன்னை வர்த்திந்து மவனையே யன்றி அவனுக்குக் காரணத்தையும் காட்டும். அப்படியாகவே அனவத்தைப் பட்டு ஒருவனை

யொருவர் சிருட்டிக்குமதுவல்லது மூலமான ஓர் ஆன்மாவுளன் எனக் காணமாட்டாதாம் ஆதலால் சொல்லப்பட்ட முதற் பஞ்ச கிருத்தியத்துக்கு விந்துநாத முதலான தேகமெல்லாம் விடுத்து உவமையில்லாத கெடாத அருட்சத்தியுடனே கூடிய சருவசத்தி பூரணாகிய பரமசிவன் கருத்தாவென்பது பொருந்தும் ஆகமங்களைக் குற்றமற ஆராய்ந்த நல்லோர் தாம் ஆராயுமிடத்து எ - று.

மன், ஒ, மற்று, அசை.

நு. வி: நிட்களன் - மல அழுக்கு இல்லாதவன். தூடணம் - பழிச்சொல், சங்கற்ப சிருட்டி - நினைவு அளவில் படைப்பது. கரண சிருட்டி - கருவிகரணங்களைக் கொண்டு உடல் முயற்சியால் படைப்பது. அனவத்தைப் பட்டு - முடிவின்மை என்னும் குற்றப் பட்டு.

## ஞானநாட்டம்

61 ஏணி போகிய கீழ்நிலைப் படலமும்
உம்பர் போகிய உயர்நிலை உலகமும்
எண்திசை மூன்று தண்டாக் காலமும்
உளப்படப் பொதிந்து நிலைக்குரி மரபின்
அவத்தை நீங்கிய தவத்தின் சார்வைக்
காண்டல் வலியோர் இன்மையின் மாண்ட
ஞான நாட்டக்கு அன்றி இலகா
யாணர்த்து இணையிரி நோக்கம் காணான்
இருள்அற இரிய விரிகதிர் பரப்பிய
ஒருதேர் நேமிப் பருதி வானோன்
காணா வாறு போலச் சேண்என
இடைகடை முதல்இறந்து உடைதர அளவை
ஒழிவற நிறைந்தோன் இன்றும் குழிகண்
கூளி ஊர்ந்த ஆடவன் திரிந்த
ஆள்வினை காட்சித்து அலகைகண் டிலதுஎனக்
காட்சியிற் கஞலிய எவற்றும் மாட்சியின்
நின்றனன் பரம காரணன்
மன்ற நன்றுஅறி ஒன்றினை யுணர்ந்தே.

இது நிட்களனு யிருந்தே அனைத்தையும் செய்கிற கருத்தா சருவான்மாக்களுக்கும் திருசியனல்லாமைக்குக் காரணம் என் என்று வினவ ஞானநாட்டம் உடையோர்க்கன்றிக் காண வொண்ணுது என்று காரியம் கொண்டு காரணம் உணர்ந்து பதிபுண்மை கூறியது.

இ - ள் எல்லை யிறந்த ஆடகேசுர புவன முதலாகக் கீழுற்ற தலங்களையும் மேலே உள்ளனவாகிய அநாகிருத புவன முதலாகிய உலகங்களையும் திக்குகள் எட்டையும் பூத பவிஷிய வர்த்தமானங் களாகிய பிறழாத காலங்கள் மூன்றினையும் தன்னிடத்தே அகப் படப் பொதிந்து கொண்டு நித்தியத்துக்குரிய முறைமையினல் அப்பிரயோசனமாகிய முயற்சியல்லாத பெரிய தவத்தினருக்குப் புகலிடமாயுள்ள பரமசிவனைக் கண்ணுற் காணவல்லோர் இல்லை இது பிரதிந்ஞை இதற்கு ஏது என்னென்னில் மாட்சிமை யுண்டாகிய ஞானக் கண்ணுக் கன்றி விளங்கத் தோன்ருத புதுமை யுடைத்தாதலால் இஃது ஏது என்போல வென்னில் உவமை யிறந்த கண் தெரியாத குருடன் உலகத்தில் அந்தகார மானது அறப் போகவும் ஓராழித்தேரை யுடைய விரிந்த கிரணங் களைப் பரப்பிவரும் சூரியதேவனைக் காணுதவாறு போல் இது திட்டாந்தம். இவை மூன்றும் கேவல வெதிரேகி யனுமானம் பரமாகாயம் போல முதல் நடு இறுதியின்றியே பிரமாண ரகி தனுய்ச் சருவ வியாபகனுய் எங்கும் நிறைந்துள்ளவன் நின்ற படிக்கு இதற்கு இன்னும் ஒரு திருட்டாந்தம் வருமாறு — குழிந்த கண்ணை யுடைத்தாகிய பிசாசு பிடிக்கப்பட்ட புருடனிடத்து வேறுபட்ட செய்தி காண்பதல்லது அப்பிசாசு கண்ணிற்குப் புலனுகாததுபோலக் காணுதற்குப் பொருந்திய பொருள்கள் எல்லா வற்றினும் காணப்படாது அழகிதாக நின்ருன் பரமகாரணனை பரமசிவன் என்று தெளிவாக. ஏகாக்கிர சித்தமாய் இருந் துணர்ந்து மிகவும் அறிவாயாக எ - று.

இன், அசை. ஐகாரம், சாரியை,

நு. வி: திருசிபனல்லாமை - காண்டற்கு இயலாமை. ஆட கேசுர புவனம் - நிலவுலகத்துக்குக் கீழ் அதனை அடுத்துள்ள உலகம் இது; கீழிருக்கும் உலகங்களுள் இதுவே மேலுள்ள உலகம் என்பர். அநாகிருதபுவனம் - நிவர்த்தி கலை முதலிய ஐங் கலைகளும் ஒன்றற்கொன்று உயர்ந்து விளங்குவனவாம் என்றும், அவற்றுள் தலையாய தாய சாந்தியதீத கலையில் அடங்கிய புவனங்கள் பதினைந்து என்றும் கூறுப; அப்பதினைந்துள் உச்சியில் இருப்பது அநாகிருத புவனம், பூத பவிஷிய வர்த்தமானங்கள் -

இறப்பு எதிர்வு நிகழ்வு என்பன. அந்தகாரம் - இருள். பிரமாண ரகிதன் - அளவைகளைக் கடந்தவன். ஏகாக்கிர சித்தமாய் - ஒருப்பட்ட மனத்தினராய்.

## சத்தி சங்கற்பம்

62 இறைசிவன் எனஅருள் உறைபதி அறைதல்
முறையல அன்மையின் மூர்த்தி கறைகடி
கரணம் இன்மையின் முரண்மிகு கடாவிடை
அறிமதி காலம் அமூர்த்தம் உறுபலந்
தருமது போலத் தலைவன் மூர்த்தத்
திரிபின னுனும் இன்தொழில் பொருவிரி
இச்சையில் இயற்றும் எனின்அவ் விச்சை
நல்தொழிற் செய்தி நயவாது ஆங்கெனிற்
கண்டிசின் யோகக் கலைத்துறை நீந்திய
ஒண்டிறல் வியோகர் போலத் தண்டா
இச்சை இறைக்குஇவண் எற்றெனிற் சொல்தகு
சல்லியம் தாள்அற வாங்கிற்று எல்லேய்
புலம்இன் றுயினும் நலமிலி கட்டகம்
அன்ன தானும் இதன்பால் இன்தொழில்
மன்னு தானும் மற்றுஅது வந்த
செய்தி கண்காண்பு எய்யா உவமையின்
பெருந்தெனைப் பலவாம் உருத்திகழ் தொழில்தான்
இருத்தல் கூடாது இருத்திய கடம்போல்
ஆதலின் காரணம் ஒன்றுஉண்டாம் என
ஓதிடில் கரும மதுமற்று ஆதற்கு
ஏதுஇடர் எனில்அது கோதில் அசேதனம்
அருமறை அறையும் உருவிலி அருவுரு
உருஅவிர் ஈசன் ஒளிதிகழ் சதாசிவன்
சாந்தன் என்றினி தம்ம
ஏந்திய கொள்கை இசையி னனே.

இது கரண ரகிதனுமாய் அமூர்த்தனுமாய் இருக்கிற பரம சிவனைக் கர்த்தா என்று சொல்லுதல் முறைமை அல்ல என வினவ, அமூர்த்தனாயிருந்தே பிரபஞ்சத்தைச் சத்திகளாலே செய்வன் என்று கூறியது.

இ · ள் கிருபைக்குப் புகலிடமாயுள்ள குருநாதனே, பஞ்ச கிருத்தியம் செய்வதற்குப் பரமசிவன் கருத்தா என்று சொல்லுமது பொருந்தி இருந்ததில்லை அவன் வடிவுடையன் அல்லாமையின் பிரபஞ்சத்தை உண்டு பண்ணுகைக்குக் குற்றமற்ற கரணங்கள் உண்டாகமாட்டா, ஆதலால் பொருந்தாமை மிக்க கடாவாயிருந்தது என்று சீடன் விண்ணப்பம் செய்ய இதற்குப் பரிகாரம் கேட்பாயாக.

காலமானது வடிவின்றி இருந்தும் அவ்வக் காலத்திற்குரிய பிரயோசனங்களைக் கொடுக்கும் அதுபோலவே கருத்தாவாகிய பரமசிவனும் மூர்த்தத்துக்கு வேறுபட்டிருந்தானாயினும் இனிதாகிய பஞ்ச கிருத்தியத்தை உவமை இல்லாத இச்சா சத்தியால் செய்யா நிற்பன் என்று இவ்வாறு அருளிச் செய்யின் அந்த இச்சா சத்தி அவ்விடத்தே நல்ல கிருத்தியமாய்ச் செயற்படாது என்கின்றாயாகில் காண்பாயாக.

யோக சாத்திரத்தை முடிய வறிந்த அழகிய வலிமையுடைய யோகிகட்கு யோகசித்தி அட்டமாசித்திகள் செய்யுமாறுபோலக் கர்த்தாவினது கெடாத இச்சாசத்தி இலக்கணம் என்று அருளிச் செய்ய யோகிகளைப் போலப் பரமசிவனுக்கு இராகம் உண்டாக வற்றோ இவ்வியல்பு பொருந்தும்படி என் என்பாயாகில் ஒளியையுடைத்தான கரணமில்லா திருந்தேயும் சொல்லப்பட்ட இருப்புத்தாளை வலியறத் தன்பால் சூழ இழுத்தது அழகிய காந்தக் கல்லே அத்தன்மைத் தாயினும் அதனிடத்தே இனியதொரு கிரியை தோன்றுதிருக்கவும் அந்த இருப்புத்தாள் காந்தக் கல்லினிடத்திலே செறிந்த செய்திபோல என அறிக. கண்ணால் காண்பதற்கு அளவுபடாத உவமையில்லாத பெருமையுடைத்தாகி நானுவித உருவமாய் விளங்குகின்ற பிரபஞ்சகிருத்தியமானது தானே உண்டாகுதல் கூடாதாம் ஒருவன் திருத்திச் செய்த கடம்போல. ஆதலாலே பிரபஞ்சத்திற்கு உபாதானமாகிய மாயையிடத்தே ஒன்றாகிய சத்தி உண்டாகவேண்டும் என்று சொன்னால் அக்கன்ம சத்தியே கருத்தாவாக அமையாதோ அதற்கு விக்கினம் என் என்று விண்ணப்பஞ் செய்ய கன்மமே கருத்தாவாக அமையும் என்பாயாயின், அது, குற்றமற்ற அசேதனமல்லவோ? சாந்தானுரூப சிவன் நிட்களமாயிருப்பர். பிரகாசம் விளங்கிய

சதாசிவ தேவர் நிட்கள சகளமாயிருப்பர். விளங்குகின்ற மகேசுர தேவர் சகளமாயிருப்பர். இவர் மூவரையும் தமக்குச் சுதந்திர திருமேனியாகக் கொண்ட கோட்பாட்டையுடைய கீர்த்தியை யுடையோனாகிய பரமசிவனே கருத்தா என இனிதாக அரிய ஆகமங்கள் சொல்லாநின்றன எ - று.

மதி, சின், மற்று — அசை.

நு. வி: கரண ரகிதன் - கருவிகள் அற்றவன். அமூர்த்தன் - உருவமில்லாதவன். பஞ்சகிருத்தியம் - படைப்பு முதலிய ஐந் தொழில்கள். இச்சா சத்தி - விருப்பாற்றல். இராகம் - விருப்பு. நானாவித உருவமாய் - பல்வேறு வடிவினதாய். கடம் - குடம். உபாதானம் - முதற்காரணம். நிட்களம் - வடிவில்லாதது.

## பஞ்ச கிருத்திய பதி அவிகாரி

63 அடையான் விகாரம் ஆயினும் சுடரவன்
சுடர்வீழ் தாமரைத் தோடுஇனிது அலர்த்தவும்
மற்றவை குவிப்பவும் உலர்த்தவும் கொற்றக்
கிரணத்து அதுவென அரணமில் கூற்றின்
முரண்தொலை யொருவனு முரியாச் சத்தியின்
அண்டர் அண்டமற்று எண்டரல் இடைவ
செய்தக் கண்ணும் திரிவிலன் வெய்யோன்
இலங்குகதிர் ஈரமண் திரளை மெழுகை
நலங்கொளக் கரைத்து நவையற வலித்தற்கு
ஒன்றே போலச் சென்றகல் பறியாச்
சத்தியிற் பிணித்தற்கு அப்பிணி அவிழ்த்தற்கு
அன்ன சத்தி அறியிற் பன்னுவம்
பொருவொடு போகா ஒளியொடு பொருந்தி
அளவற அகன்று விளைவதோர் சலனம்
இன்றி யென்றும் நின்றுங்கு ஒன்று
மறைப்பதை இன்றி உறப்பெருத் தகன்ற
உருவொடு செறியாது வெருவரும் அராகம்
ஆதிய ஆணையா அலர்ஐம் பூதம்

ஊர்தரு விந்துவின் நேர்தர இயைந்த
செய்தியின் திகழ்ந்தும் பிறிதிற் சிறிதும்
உய்யாது ஆசை ஒளிமுகம் எங்கணும்
ஆகி முதல்இடை கடையின் போகாது
யாவதோர் பந்தமும் இரி இப் போவதும்
வருவதும் இறந்து மேலாய் முடிந்த
திருவாய் எல்லை யாகி ஒருவா
நுணுங்கியது அரனை இணங்கி வணங்கா
விந்துவில் வைகரி யாதி விருத்தியில்
வந்துஆ ணவம்ஆன் மாவை மறைப்பது
போல விகாரித் ததுமற்று அஃதுஎது
போலும் எனில்கடல் தண்கதிர் வெஞ்சுடர்
ஒட்டிய காலை உருத்தெழு திரையின்
விட்டுயர் ஓதை விராவுபு முற்ற
அந்தரம் மறைவது போலப் பொங்கிய
வாறென அமோகன் ஈறில் சத்தி
ஒன்று பலபோல நின்றுஇயல்பு எவ்வணஎனில்
வென்றி விரிச்சிகன் விரிகதிர்க் கோடையிற்
கோடலின் ஒன்றே யாகி இச்சை
ஆடான் ஆகி ஆடுநன் போலப்
பலபோல் தோன்றல் அல்லர்வாள் அமலன்
இச்சைசெய் சத்தி இவணம்மற்று அவனே
காரியத் திசைந்த பேரிசைப் பெருவலி
அறிவின்று அறிவதை ஒத்துப் பிறிவின்று
இருந்தொழில் இலதுஅஃது அருந்தொழில் சிவணல்
அருமறை யகத்தும் உலகத்து எங்கணும்
வருமறி சிந்தா மணிகற் பகம்இவை
வேண்டுநர் வேண்டிய ஆண்டாண்டு உதவல்
அன்ன தூய அளவில் அரனுடைப்
பன்னு ஞானப் படர்அடு பெருவலி
இலங்கிருங் கிரியையின் விதியின்
நலந்தரு காமம நல்குமன் நயந்தே.

இது பஞ்சகிருத்தியச் செயலால் விகாரம் கூடும் என்று வினவப் பரமசிவன் அவிகாரியாயிருந்தே ஏக சத்தியாலே பிர பஞ்ச காரியஞ் செய்வன் என்று சொல்லியது.

இ - ள் ஆதித்தன் அவிகார முடையனுயினும் ஆதபத்தை விரும்புதலையுடைய தாமரை மொட்டை இனிதாக மலர்விக்கவும் ஆம்பல் முதலான ஏனைப் புட்பங்களை மொட்டிப்பிக்கவும் பறித்த புட்பங்களை உணத்தவும் அவனது கீர்த்தியை யுடைத்தாகிய கிரணத்தாலே யாம். அதுபோலப் பரிகாரமில்லாத கூற்று வனுடைய வலியைக் கெடுத்த பரமசிவனும் கெடாத சக்தியினலே தேவருலகமும் மற்றும் எண்ணிறந்த அண்டங்களும் செய்தானேயா யினும் அவிகாரியாயே இருப்பன் இந்த ஆதித்தனுடைய விளங்கு கின்ற ஒளியானது ஈரமண்ணின் திரளைக் குற்றமற வலிக்கப் பண்ணவும் வலியுண்டான மெழுகை நன்ருக உருக்கவும்தான ஒன்றே யாய் இருத்தல் போல, ஒருகாலத்தும் கூடுதலும் பிரிதலும் அறியாத ஏகசத்தியாலே சிருட்டி யாதி தொழில்களைப் பரமசிவன் செய்யா நிற்பன்;

அத்தன்மைத்தாகிய சத்தி இருக்கும்படி அறிய வேண்டில் அதனைச் சொல்வோம்; உவமையில்லாத மக்த்தான பிரகாசமாய் அளவில்லாத சருவ வியாபியாய் தனக்கு உண்டாவதொரு விகாரமின்றி நித்தியமாய் அவ்விடத்தே ஒரு பதார்த்தத்தான் மறைக்கப்படாததாய் மிகவும் பெருத்து விரிந்திராநின்ற உருவ முடையதன்ருய் நல்லோரலே வெருவப்பட்ட இராகத்துவேஷ முதலானவற்ருேடு இசையாததாய்க் காண் இருப்பது சிவசத்தியின் சொருப விலக்கணம்.

அந்தச் சத்திதான் விரிந்திருக்கின்ற பஞ்சபூதங்களுக்கும் உபாதானமான மகா மாயையைப் பிரேரிப்பதான சிவதத்துவத் தில் அழகிதாகப் பொருந்திய பஞ்சகிருத்தியங்களிலே பிரகா சித்தும் இக் கிருத்தியமன்றி வேறு பதார்த்தமில்லாமை யாலே மற்ருெரு தொழிலில் யாதும் ஆசையின்றியே சர்வதோமுகமாய் விளங்கி முதல் நடு இறுதி யின்றியே சருவ பந்தங்களையும் ஒழிந்து போக்குவரவின்றியே எல்லாப் பதார்த்தங்களுக்கும் மேலாய் முடிவான நாதபரியந்தம் தேடக்கிடையாத செல்வம் மிகுந்த எல்லையாய் நீங்காத சூக்குமமானதாய் பரமசிவனுடனே கூடி கெடாத சுத்தமாயையினுடைய பிரவிருத்தியில் தோன்றிய வைகரி மத்திமை பைசந்தி சூக்குமை என்னும் நால்வகை வாக் கையும் விருத்தியுறத் தோற்றுவிக்கும் காரணத்தினல் வந்து சூக்குமமான ஆன்மாவை ஆணவமலம் மறைப்பதுபோலச் சிருட்டி காலத்திலே அந்த விந்துவைக் கலக்காநிற்கும்.

# ஆயுள் சந்தா செலுத்தினுல்

## ஓர் அன்பளிப்பு

## ஸ்ரீ குமரகுருபரர் திங்களிதழுக்கு

ரூ. 125 ஆயுட் சந்தா செலுத்தினுல்

ரூ. 55 மதிப்புள்ள

## கந்தர் கலிவெண்பா

இசைத்தட்டு ஒன்று அன்பளிப்பாக
அளிக்கப்பெறும்.

**ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய**
அரிய பாராயண நூலாகிய கந்தர் கலிவெண்பா
பிரபல இசையறிஞர் சேலம்
டாக்டர் ஜெயலட்சுமி அவர்களின்
இனிய குரலிசையுடன் L. P இசைத்தட்டாக
வெளியிடப்பெற்றுள்ளது.

ஆயுள் சந்தா ரூ. 125 அனுப்புவோருக்கு இந்த இசைத்
தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.
அஞ்சல் செலவு ரூ. 9—00.

முன்னமேயே ஆயுட்சந்தா செலுத்தியவர்கள் ரூ 25-ம்
அனுப்புகைச் செலவும் பணவிடை மூலம் அனுப்பி
இசைத்தட்டைப் பெறலாம்.

ஸ்ரீ குமரகுருபரர்'
பதிவு எண். T. N. / KMB / 12.

# ஸ்ரீ குமரகுருபரர்

சமய இலக்கியத் திங்கள் இதழ்

சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா | (உள்நாடு) | ரு 125-00 |
| ,, | (வெளிநாடு) | ரு 225-00 |
| ஆண்டுச்சந்தா | (உள்நாடு) | ரு 10-00 |
| ,, | (ஸ்ரீலங்கா) | ரு. 13-00 |
| ,, | (வெளிநாடு) | ரு. 15-00 |

M O. அனுப்ப வேண்டிய முகவரி:
நிர்வாக ஆசிரியர். "ஸ்ரீ குமர குருபரர்"
ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள். 612 504.

வெளியிடுபவரும் ஆசிரியரும்: ம. வே. பசுபதி
அச்சிடுபவர் தா ம. வெள்ளைவாரணம்.
ஸ்ரீகுமரகுருபரர் அச்சகம், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

Posted at Sub-Post Office at Tirupanandal
612504
Licence No. 01. Licensed to Post without Prepayment.

திரு.

ஏ. 67
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
பெஸண்ட் நகர்,
சென்னை – 600 090.